
# கோபுரம்





தகவல் இதழ் சர்வசித்துவருடம் ஐப்பசி 2007

















**மதவிவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு**

**இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**



இந்துசமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்
கொண்டாடும்
சுந்தரமூர்த்தி நாயனார்
குருபூசை









2007-07-22


யூன் 29, 30, யூலை 1
June
2007
Department of





# கோபுரம்

## தகவல் இதழ்


சர்வசித்து வருடம் ஐப்பசி 2007

மலர் 15 இதழ் 02


## தொகுப்பு

### ஆய்வுப்பிரிவு

### மலர்க்குழு


**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்

**திரு.சீ. தெய்வநாயகம்**
உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)

**திரு.ம.சண்முகநாதன்**
உதவிப்பணிப்பாளர் (இந்துவிவகாரம்)

**திருமதி தேவகுமாரி ஹரன்**
சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்

**திருமதி நித்தியவதி நித்தியானந்தன்**
ஆராய்ச்சி அலுவலர்



**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**இல. 248 1/1, காலிவீதி, கொழும்பு - 04**

**தொலைபேசி இல: 2552643** **தொலைநகல்: 2552825**

# எண்ணம்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்திப் பணிகளில் ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், நிறுவனங்களின் பணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஆலயங்களின் புனரமைப்புக்காகவும், மகாகும்பாபிஷேகத்திற்காகவும் நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆலயங்கள் யாவும், சிறியதாக அமைவு பெற்றுப் பக்தர்களின் குறை தீர்க்கும் சரணாலயமாக இருக்க வேண்டும். அதை விடுத்து அகலக்கால் விரித்து ஆலயத்தைக் கட்டமுடியாமல் அல்லல்பட்டு ஆண்டுகள் பல சென்றும் கும்பாபிஷேகம் காணமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகக் கூடாது. மற்றவர்கள் இராஜகோபுரம் கட்டினால் நாமும் கட்டவேண்டும் என்ற எண்ணம் தகுதியை மிஞ்சி ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஆலயங்கள் யாவும் வியாபாரத் தலங்களாக அமையாது, சமூகத்துடன் இணைந்து சமூக மேம்பாட்டுக்காகத் திட்டங்களை வகுத்துச் செயற்படுவது மேலானது. பூசைகள் காலம் தவறாமல் நடைபெறுவது சாலச்சிறந்தது.

ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலைகள் உருவாக வேண்டும். இதுவே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். அறநெறிப் பாடசாலைகள் என்பது சாதாரண உயர்கல்வியை விட உயர்ந்தது. பெற்றோர்கள் தமது பிள்ளைகள் உயர்நிலைக்கு வரவேண்டுமென ஆசைப்படுவதில் தவறில்லை. ஆனால் அந்தப் பிள்ளை சமூகத்தில் சான்றோனாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டுத் தம் பிள்ளையை வளர்த்தால் அதுவே பெற்றோர் பிள்ளைக்குச் செய்யும் அரும்பணியாகும். சான்றோனாக வளரும் பிள்ளை நல்ல சமூகத்தை உருவாக்கும் தன்மை கொண்டவனாக அமைவான். பெற்றோர்கள் யாவரும் தம் பிள்ளைகளுக்கு அறநெறிக் கல்வியைப் புகட்டுவது மிகவும் உயர்வானது. ஞாயிறு தினங்களில் தம் பிள்ளைகளை அண்மையில் உள்ள ஆலயத்தில் அல்லது நிறுவனத்தில் இயங்கும் அறநெறிக் கல்வியைப் புகட்டுவது மிகவும் உயர்வானது. ஞாயிறு தினங்களில் தம் பிள்ளைகளை அண்மையில் உள்ள ஆலயத்தில் அல்லது நிறுவனத்தில் இயங்கும் அறநெறிப் பாடசாலைக்கு அனுப்பி வைத்து அப்பிள்ளைக்கு அறநெறிக் கல்வியைப் புகட்டி வைத்தால் அதுவே அக்குடும்பத்தின் உயர்நிலைக்கு வழிசமைப்பதாக அமைவு பெறும். அறநெறிப் பாடசாலைகளில் கடமைபுரியும் ஆசிரியர்களும் தமது சில சலுகைகளுக்காக அறநெறிப்பாடசாலைகளில் சேவையாற்றாமல் தம் சமூகத்தினதும், சமுதாயத்தினதும் உயர்வை எண்ணி அறநெறிக் கல்வியைப் புகட்டவேண்டும். தம்மை நாடி வரும் சிறார்களை அறநெறி என்னும் ஆலவிருட்சத்தின் கீழ் அமர வைத்துச் சிறந்த அறநெறிக் கல்வி புகட்டி, சான்றோருக்கு வேண்டியது இவர்களது பாரிய பொறுப்பாகும். அத்துடன் ஆசிரியர்களாகிய தங்களையும் சிறந்த தகுதி நிலைக்கு ஆளாக்கி நிரந்தர பதவிகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பைப் பெறவேண்டும்.

நிறுவனங்கள் பெயரில் மட்டும் நிறுவனங்களாக இல்லாது தமது கிராமத்தின் முக்கிய தேவைகளை அறிந்து செயற்படல் வேண்டும். இந்துக்களின் பாரம்பரியங்களையும் கலாசார பண்புகளையும் வளர்த்தெடுப்பவைகளாக நிறுவனங்கள் இருக்க வேண்டும். நிர்க்கதியான சிறார்களைப் பராமரித்து நல்வழி காட்டுவதுடன் ஆலயங்களுடன் இணைந்து அல்லலுறும் மக்களுக்கு முடிந்தவரை சேவையாற்ற வேண்டியது நிறுவனங்களின் முக்கிய பணியாகும்.

இத்தகைய பணிகளில் ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைகளும் நிறுவனங்களும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துச் சேவையாற்றினால் நமது சமுதாயம் உயர்ந்த சான்றோர்களை உள்ளடக்கிய சமுதாயமாக மிளிரும். திணைக்களத்தின் குறிக்கோளும் நிறைவேறும் என்பது எமது எண்ணமாகும்.

**மலர்க்குழு**

# சமய அபிவிருத்தியும் அது தொடர்பான செயற்பாடுகளும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகளில் இந்துசமய அபிவிருத்தி முக்கியமானதொன்றாகும். இந்து சமயம் தொடர்பான விழாக்கள், பண்டிகைகள், குருபூசைகள், ஆன்மீக எழுச்சிப் பட்டறைகள் போன்ற இந்துமத அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் பல்வேறு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இவ்வருடமும் ஏப்ரல் - ஆகஸ்ட் வரையுள்ள காலப்பகுதிக்குள் பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

## காரைக்கால் அம்மையார் குருபூசை

வவுனியா மாவட்டத்தில் 29-04-2007 ஆம் திகதி காரைக்கால் அம்மையார் குருபூசை வவுனியா குருமண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இவ்விழாவில் காரைக்கால் அம்மையார் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. இவ்விழாவில் காரைக்கால் அம்மையார் தொடர்பாக நடத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## உமாபதி சிவாசாரியார் குருபூசை

கொழும்பு மாவட்டத்திலுள்ள கணபதி வித்தியாலய மண்டபத்தில் உமாபதி சிவாச்சாரியார் குருபூசை 04-05-2007 ஆம் திகதி நடைபெற்றது. பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டுடன் குருபூசை ஆரம்பமாகியது. இக்குருபூசை நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்பு ஆச்சிரமத்தின் மருள்நீக்கியார் மண்டபத்தில் 11-05-2007 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. இக்குருபூசை விழாவில் பல சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

மஸ்கெலியா சீர்பாத ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண இந்து அறநெறிப்பாடசாலையினர் திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை நடத்தினர். இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள், பஜனைப் பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையிலும் நாவற்குழி அறிவொளிமன்ற அறநெறிப்பாடசாலை, கிளிநொச்சி மாவட்டத்தில் திருநெறிக்கழக அறநெறிப்பாடசாலை, இரத்தினபுரி மாவட்டத்தில் சிவசக்தி அறநெறிப்பாடசாலை, ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானத்திலும், பதுளை மாவட்டத்தில் ஐங்கரன் அறநெறிப்பாடசாலை, ஆலிஎல ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திலும் குருபூசை நிகழ்வுகள் நடைபெற்றன. இவ்விழாவில் பல சிறப்புச் சொற்பொழிவுகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை 02-06-2007 திகதி இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் பிரதேசத்தில் இணுவில் இளம் தொண்டர்சபை பிரதான மண்டபம், தென்மராட்சி நுணாவில் ஸ்ரீவீரபத்திரர் ஆலய அறநெறிப்பாடசாலை, வடமராட்சி ஸ்ரீ பரமானந்த ஆச்சிரம அறநெறிப்பாடசாலை, தீவகப் பிரதேசத்தில் புங்குடுதீவு சர்வோதய சேவை வளாகத்திலும் குருபூசைகள் நடத்தப்பட்டன. இப்பூசை நிகழ்வில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் வீரமுனை குருசுவாமி ஐயர் அறநெறிப்பாடசாலை சீர்பாததேவி சிறுவர் இல்லத்தில் திருஞானசம்பந்தர் குருபூசையைக் கொண்டாடியது. முல்லைத்தீவு மாவட்டத்தில்

முல்லைத்தீவு மாவட்ட சைவமன்றம் இந்துசமய கலாசார திணைக்களத்துடன் இணைந்து திருஞானசம்பந்தர் குருபூசையை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் கொண்டாடியது. இக்குருபூசை வைபவத்தில் பல சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

நால்வர்களில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை தினமான ஆனிமகம் பல்வேறு மாவட்டங்களிலும் பூசை வழிபாடுகளுடன் 20-06-2007 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் பிரதேசத்தில் சங்கானை வேலவில் அறநெறிப்பாடசாலை பிரதான மண்டபம், தென்மராட்சி கொடிகாமம் தவசிக்குளம் கண்ணகையம்மன் ஆலய அறநெறிப்பாடசாலை, காரைநகர் மாணிக்கவாசகர் மடாலயம், வடமராட்சிப் பிரதேசத்தில் தச்சை ஐங்கரன் அறநெறிப்பாடசாலை மண்டபம் ஆகிய இடங்களில் குருபூசை கொண்டாடப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து கலாசார நிலையம் நாவற்குடாவிலும் குருபூசை இடம்பெற்றது. இக்குருபூசையில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் பலர் கலந்து கொண்டனர். இத்திட்டம் இடம்பெயர்ந்திருந்த மாணவர்களுக்கான சமய மேம்பாட்டிற்காகச் செயற்படுத்தப்பட்டது. மேலும் இம்மாவட்டத்தில் காரைதீவு கண்ணகி அறநெறிப்பாடசாலையிலும் மேற்படி குருபூசை கொண்டாடப்பட்டது.

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுந்தரர் குருபூசை தினம் 29-07-2007 ஆம் திகதி பெரிய தேற்றாத்தீவு ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையிலும் 23ஆம் திகதி பாண்டிருப்பு நாவலர் அறநெறிப்பாடசாலை, 22-07-2007 ஆம் திகதி நால்வர் கோட்டம் கல்முனை அன்பு ஆச்சிரமம் போன்ற இடங்களிற் பூசை வழிபாடுகளும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. வவுனியா மாவட்டத்தில் ஸ்ரீ சிந்தாமணி ஆலய பரிபாலனசபை ஆலயத்திலும் குருபூசை நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறை தம்பாட்டியிலும், திருநெல்வேலி சைவித்தியாவிருத்தி சங்க அறநெறிப்பாடசாலை மண்டபத்திலும் சுழிபுரம் யோகி கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலையிலும் குருபூசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 23-07-2007 ஆம் திகதி முல்லைத்தீவு இந்து வித்தியாலய மண்டபத்திலும் குருபூசை கொண்டாடப்பட்டது. இக்குருபூசை தின நிகழ்ச்சியில் பல சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

## விசேட சொற்பொழிவு

இந்துசமய கலாசார திணைக்களத்தினால் விசேட இந்துசமய சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவ்வகையில் இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். சத்தியசீலன் அவர்கள் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்தியகல்லூரி, இரத்மலானை இந்துக்கல்லூரி, வத்தளை ஹேகித்த சிவசுப்பிரமணிய ஆலயம், நுகேகொட தமிழ் மகாவித்தியாலயம், ராஜகிரிய ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 01-06-2007 - 04-06-2007 ஆகிய தினங்களில் சிறப்புச் சொற்பொழிவினை ஆற்றினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்சை சேர்ந்த இந்துநாகரித்துறை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் 04-07-2006 - 04-07-2007 வரையான தினங்களில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலைகளில் இந்துசமய ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. கொழும்பு நுகேகொட தமிழ் வித்தியாலயத்தில் "நற்சிந்தனை" கொழும்பு 10 தொண்டர் தமிழ் மகாவித்தியாலயத்தில் "மனித விழுமியங்கள்" என்னும் தலைப்புக்களிலும் ஆன்மீக சொற்பொழிவுகளை வழங்கினார்.

## ஆன்மீக சொற்பொழிவுகள்

**04-05-2007** ஆம் திகதி காரைநகர் வாரிவளவுப் பிள்ளையார் ஆலயத்தில் திரு இராசையா நாகேந்திரராஜா "பசுவதை" என்னும் விடயம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

**21-05-2007** ஆம் திகதி கொழும்பு கணபதி வித்தியாலய மண்டபத்தில் "உமாபதி சிவாச்சாரியார்

கூறும் "அன்புநெறி" என்னும் தலைப்பில் சைவப்புலவர் திரு.சு. செல்லத்துரை அவர்கள் சொற்பொழிவாற்றி-னார்.

**13-05-2007** ஆம் திகதி யாழ் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் சைவப்புலவர் நா.நவராஜ் 'உளநெருக்கீட்டிற்கான சுய முகாமைத்துவம்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

**01-05-2007** ஆம் திகதி வவுனியா வெளிவட்ட வீதி சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத்தில் தமிழ்மணி அகளங்கள் அவர்களின் சொற்பொழிவு இடம்பெற்றது.

**22-06-2007** ஆம் திகதி மட்டக்களப்பு குருக்கள் மடம் கலைவாணி மகாவித்தியாலயத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு நடைபெற்றது.

**18-05-2007** ஆம் திகதி காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் 'அம்பிகையின் அருள்' என்னும் தலைப்பில் திரு. ச. சஜீவன் சிறப்புச் சொற்-பொழிவாற்றினார்.

**29-06-2007** ஆம் திகதி புத்தளம் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட சமயச்சொற்பொழிவு நடைபெற்றது. விஷ்வஹிந்துபரிஷத்தின் சொற்பொழி-வாளர் திரு எம். பாலநாத் சொற்பொழிவினை வழங்கி-னார்.

**18-06-2007** ஆம் திகதி கல்முனை இராமகிருஷ்ண-மிஷன் மகாவித்தியாலய மண்டபத்தில் சமயச் சொற்-பொழிவு நடைபெற்றது. கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் "சமய விழுமியம்" என்னும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவினை நடத்தினார்.

யாழ்ப்பாணம் அருள்மிகு தவசிக்குளம் ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயில் அலங்கார உற்சவத்தையொட்டி **23-06-2007** சனிக்கிழமை "பாடும் பணியே பணியா-யருள்வாய்" என்னும் தலைப்பில் திரு. இராசையா ஸ்ரீதரன் இசைச் சொற்பொழிவாற்றினார். 22-06-2007 ஆம் திகதி "ஆகமங்கள் உணர்த்தும் பூசைவழிபாட்டு முறை" என்னும் தலைப்பில் சைவப்புலவர் நித்திய-தாசன் சொற்பொழிவாற்றினார்.

**29-06-2007** ஆம் திகதி மட்டக்களப்பு மண்டூர் மகாவித்தியாலயத்தில் திரு பொ.பரமானந்தராசா அவர்கள் ஆன்மீகச் சொற்பொழிவினை வழங்கினார். **15-06-2007** ஆம் திகதி மட்டக்களப்பு மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் திரு பேரின்பம் அவர்கள் ஆன்மீகச் சொற்பொழிவாற்றினார்.

**06-07-2007** ஆம் திகதி நல்லூர் நாவலர் மணி-மண்டபத்தில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன்

"நெஞ்சிற்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி" என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு வழங்கினார்.

**13-07-2007** ஆம் திகதி யாழ்ப்பாணம் வன்மீக விநாயகர் ஆலயத்தில் திரு. இரா. ஈஸ்வரன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

## புண்ணிய கிராமத்திட்டம்

இந்துசமய அபிவிருத்தியின் செயற்பாடுகளுள் புண்ணிய கிராமத்திட்டமும் ஒரு செயற்பாடாக ஒழுங்கமைப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு ஜனாதி-பதி அவர்களின் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வகையில் 08-07-2007ஆம் திகதி யாழ்மாவட்டம் தென்மராட்சிப்பிரதேசத்தில் தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலயத்திலும் 17-06-2007 ஆம் திகதி வலிகாமம் பிரதேசம் சாவற்கட்டு ஞானவைரவர் அறநெறி பிரதான மண்டபம், ஆனைக்கோட்டையிலும் 26-06-2007 தீவகம் வேலணை செல்வக்கதிர்காமம் சரவணையிலும் 24-06-2007 வடமராட்சி தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயத்திலும் நடைபெற்றது.

பதுளை மாவட்டத்தில் 14-08-2007 ஆம் திகதி அடாவத்தை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயிலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவ பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஸ் அவர்களும் கலந்து கௌரவித்தார்.

## நவராத்திரி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்-

தின் நவராத்திரி விழா அக்டோபர் 18, 19ஆம் திகதிக-ளில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க அவர்களும் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி றோஸ் பெர்னாண்டோ, முன்னை நாள் செயலாளர் திரு. பி.கொடித்துவக்கு ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்ற இரண்டு நாள் நிகழ்வுகளிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன.

நவராத்திரி விழா தொடர்பாக திணைக்களம் ஏடு தொடக்குவதற்கான ஏட்டுச் சுவடிகளையும் இவ்விழா-வின் பொருட்டு நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளுக்-குப் பரிசில்கள் வழங்குவதற்காக சமய நூல்களை-யும், விழா நடத்துவதற்கு வசதி குறைந்த பாடசாலை-களுக்கும், நிறுவனங்களுக்கும் நிதியுதவிகளையும் வழங்கியது.

இவை தவிர இலங்கைப் பாராளுமன்றத்தில் அக்-டோபர் 19ஆம் திகதி நவராத்திரி விழா செய்வதற்-கான சிறப்பான ஏற்பாடுகளையும் திணைக்களம் மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.



## திருமாங்கல்யம்

இந்துக்களின் திருமணத்தின்போது மணமகனால் மணமகளுக்கு சுபமுகூர்த்தத்தில் அணிவிக்கப்படும் மங்கல நாண் தாலி என்று அழைக்கப்படுகிறது. இன்றுள்ள இந்துக்களில் திருமணத்தன்று தாலி கட்டும் நிகழ்வு மிகப் பிரதானமானதாகவும் முக்கியமான ஒரு சடங்காகவும் கருதப்படுகிறது. இவ்வழக்கம் எப்பொழுது வந்தது என்று பண்டைய இலக்கியம், வழக்காறு, வரலாறு, ஆராய்ச்சியாளர் இது பற்றிக் கூறும் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு ஆய்ந்து பார்க்கின் சங்க காலத்திலும் பிற்பட்ட நூற்றாண்டுகளிலும் (ஏறத்தாழ கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை) நடைபெற்ற திருமணங்களில் தாலி கட்டும் வழக்கம் இருந்ததற்கான நேரடியான ஆதாரங்கள் இல்லை என்றே கூறவேண்டும்.

## திருவிழாக்கள்

திருக்கோயில்களில் பத்து, பன்னிரண்டு, பதினேழு, இருபத்தொரு நாட்கள் வரையில் மிகச்சிறப்பாகப் பூசைகள் நடத்தி அங்குள்ள மூர்த்திகளின் திருவுருவங்களைப் பலவித வாகனங்களின் மேல் எழுந்தருளச் செய்து நடத்துவிக்கும் விழாவிற்குத் திருவிழா என்று பெயர். இது பெருவிழா என்றும் மகோற்சவம் என்றும் சொல்லப்படும். உற்சவம் என்பது உத்தம யாகம் எனவும், மேலான ஐந்தொழில்கள் எனவும், படைப்பு நெறியைக் குறிப்பதென்றும், போக மோட்சங்களைக் கொடுப்பதென்றும் பொருள் கொள்வர். இப்பெரிய திருவிழாக்களைச் செய்தவர்கள் சகல போகங்களையும் அனுபவித்து நற்பேறு பெறுவர்.



2007 வருடாந்த ஆய்வரங்கின் தொடக்க வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மதவிவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு பண்டு பண்டாரநாயக்கா அவர்கள் வரவேற்கப்படும் நிகழ்வு





தொடக்க வைபவத்தினை அமைச்சர் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார்



இந்து ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கு 19-09-2007 இல் திணைக்களத்தில் நிதியுதவி வழங்கப்பட்ட நிகழ்வில் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் உரையாற்றுகின்றார்.



பணிப்பாளரினால் இந்து ஆலய பிரதிநிதியொருக்கு காசோலை, நந்திக்கொடி என்பன வழங்கப்படுகின்றது.



இந்து ஆலயங்கள் இந்து நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்



ஆய்வரங்கின் போது திணைக்கள வெளியீடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டு வைக்கின்றார்.



ஆய்வரங்கில் கலந்துகொண்ட அமைச்சின்
உயர் அதிகாரிகள், அறிஞர்கள், ஆர்வலர்கள்






நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டி திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் உதவிப் பணிப்பாளர் ந.அனுருத்தனனும் பூஜை வழிபாட்டில் ஈடுபட்டபோது




இந்து சமய கலாசார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி) திரு. எஸ். தெய்வநாயகம் ஆய்வரங்கு தொடக்க வைபவ நிகழ்வில் வரவேற்புரை வழங்குகின்றார்.




ஆய்வரங்கில் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தொடக்கவுரையை வழங்கி வைபவத்தை ஆரம்பித்து வைக்கிறார்.




ஆய்வரங்கு முதல் நாள் நிகழ்வில் தலைமையுரையை பேராசிரியர் சி.பத்மநாதன் வழங்குகின்றார்




ஆய்வரங்கிற்கு இந்தியாவிலிருந்து வருகை தந்த பேராசிரியர் இரா.நாகசாமி அவர்கள் தொடக்கவுரை வழங்குகின்றார்.




ஆய்வரங்கின்போது கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் ஆசியுரை வழங்குகிறார்




ஆய்வரங்கில் தொகுப்புரை வழங்கும் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. ம.சண்முகநாதன்

ஹாவாயில் இருந்து வருகை தந்த சுவாமி ரிஷி தொண்டுநாதன் அவர்கள் திணைக்கள கேட்போர் கூடத்தில் அருளுரை வழங்கிய நிகழ்வு





## ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகள்

திணைக்கள ஆய்வுப் பிரிவின் செயற்பாடுகளாக உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக தரமான நூல்களை இனங்கண்டு கொள்வனவு செய்தல், இந்து கலைக்களஞ்சியம் பதிப்பித்தல் கிடைத்தற்கரிய நூல்களைப் பதிப்பித்தல், இந்து சமய ஆய்வரங்கினை வருடம் தோறும் ஒழுங்கு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

### உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து நூல் கொள்வனவு

இலங்கை உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்துசமய கலாசார திணைக்களம் எழுத்தாளர்களிடமிருந்து நூல்களைக் கொள்வனவு செய்து வருகின்றது. 2007 ஆம் ஆண்டிற்காக இதுவரை 48 எழுத்தாளர்களிடமிருந்து 1925 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவைகள் நூலகங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஆராய்ச்சிப் பிரிவினரின் கிடைத்தற்கரிய நூல்கள் பதிப்பித்தல் தொடர்பான செயற்பாட்டில் இவ்வருடத்திற்கான பதிப்பு நூலான "ரகுவம்சம்" அச்சில் உள்ளது. அதேபோன்று இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதி IX, பண்பாடு என்பனவும் அச்சில் உள்ளன.

### இந்துசமய ஆய்வரங்கு 2007

#### பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிவகுத்துச் சென்ற புண்ணியசீலர்கள் பூத்து மலிந்திருந்த பல்லவர் காலத்தை ஆய்வின் அடித்தளமாகக் கொண்டு மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாடு அமைச்சின், அனுசரணையுடன் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தனது பதினைந்தாவது ஆய்வரங்கை 2007.06.29 முதல் 2002-07-01 வரை மூன்று நாட்கள் நடத்தி நிறைவு கண்டுள்ளது.

மாண்புமிகு அமைச்சர் பண்டு பண்டாரநாயக அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த ஆய்வரங்கு வெள்ளிக்கிழமை காலை மங்கள விளக்கேற்றி திருமதி பவானி முகுந்தனின் தேவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. அரங்கின் தலைமையைப் பெருமதிப்பிற்குரிய பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் ஏற்றிருந்தார்.

"பக்திநெறியும் பண்பாட்டுக் கோலங்களும்" என்ற பெருந்தலைப்பைக் கொண்ட ஆய்வரங்கின் உள்ளடக்கமாகத் தொடக்க வைபவம், தமிழக அரசியலும் வரலாறும், சமயமும் பண்பாடும், திருத்தலங்களும் கலைகளும், திருமுறைகளும் திவ்விய பிரபந்தங்களும், பல்லவர் காலத்துச் சமூகம், இலக்கியங்களும் மொழியும் என்ற உபாங்கங்களைக் கொண்டிருந்தது. இத்தலைப்புக்களுக்கு அமைவாகத் தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த தலை சிறந்த அறிஞர்களும், இலங்கையின் அறிஞர்களும் இளம் ஆய்வாளர்களும் தத்தம் ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்து அரங்கின் நிகழ்வுகளை இட்டுச் சென்றனர்.

பார்வையாளர் மண்டபம் பல அறிஞர் பெருமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்களால் நிரம்பி இருந்தது. சபையோரின் கருத்துக்களுக்கும் அரங்கில் இடமளிக்கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாக அமைந்தது. மக்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் திணைக்களத்தின் எதிர்காலச் செயற்பாட்டிற்குப் பங்களிப்பாக அமைந்தது என்று கருத முடிந்தது. உதவிப் பணிப்பாளர் திரு. சீ.தெய்வநாயகம் அனைவரையும் இனிதே வரவேற்று உரையாற்றினார்.

ஆரம்ப நிகழ்வில் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தா அவர்களால் வழங்கப்பட்ட ஆசியுரை அரங்கிற்கு வலிமை சேர்த்தது. தொடர்ந்து வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அம்மையாரின் ஆசியுரையில் தற்கால இளநிலையாளர்களுக்கு வரலாற்றுத் தேடல்களின் இன்றியமையாமை பற்றி விளக்கி அதற்கு அடிகோலுகின்ற ஆய்வரங்கு சிறப்புற நடந்தேற ஆசி பகர்ந்தார்.

தொடக்கவுரை நிகழ்த்திய இந்துசமய, கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் திணைக்களத்தின் பணியானது இந்துசமய மேம்பாடு, அறநெறிப்பாடசாலைகள், கலை கலாசாரம், சமய ஆய்வுகள் ஆகிய நான்கு துறை சார்ந்ததாக அமைந்துள்ளதாகவும் அதற்கான பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அமைச்சின் ஆதரவும், கல்விமான்களினதும் மக்களதும் ஆதரவும் அமோகமாகக் கிடைப்பதாகக் குறிப்பிட்டார்.

தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் சி.பத்மநாதன் கடந்த காலங்களில் சமய விவகார அமைச்சர்கள் பலரும் இந்துசமய மேம்பாட்டிற்கு ஆற்றிய பணிகள்

பற்றி எடுத்துக் கூறினார். இன்றைய அமைச்சர் மாண்பு மிகு பண்டு பண்டாரநாயக அவர்களது தந்தையார் மதிப்பிற்குரிய S.D.பண்டாரநாயக்க அவர்கள் ஆற்றிய பங்களிப்பினையும் விதந்துரைத்தார். தற்போதைய மத அலுவல்கள் அமைச்சர் இந்து சமய திணைக்களத்திற்கு ஆற்றும் பங்களிப்பினையும் எழுத்தியம்பினார். மேலும் தமிழகத்திலிருந்து வருகை தந்து ஆய்வரங்கில் பங்குபற்றும் பேராசிரியர் இரா.நாகசாமி, கலாநிதிகள் சு. இராஜவேலு, இரா.கலைக்கோவன், ஆ.பத்மாவதி ஆகியோரது புலமை பற்றியும் விதந்துரைத்தார். ஆய்வரங்கிற்குப் பங்களிப்புச் செய்யும் ஆய்வாளர்கள் அனைவரையும் பாராட்டினார்.

தொடக்க வைபவத்தின் சிறப்பம்சமாக பிரதம விருந்தினரான அமைச்சர் மாண்புமிகு பண்டு பண்டாரநாயக்க அவர்கள் பொன்னடை போர்த்திப் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அமைச்சர் தனதுரையில் ஆய்வரங்கின் அதிதியாகக் கலந்துகொண்டமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தார் தான் பதவியேற்றபின்னர் முதன் முறையாகக் கலந்துகொள்ளும் இந்து சமய நிகழ்வு இதுவென்றும் குறிப்பிட்டார். சமய ரீதியாக நடைபெறும் பதினைந்தாவது ஆய்வரங்கினைப் பாராட்டினார்.

"பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்" என்ற சிறப்பு மலரும் "சங்ககால இலக்கியமும் சமூகமும்" என்ற இரு நூல்களும் அமைச்சரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. நூல் அறிமுகவுரையை கலாநிதி செ.யோகராஜா அவர்கள் நிகழ்த்தினார். அமைச்சர் அவர்களால் பொன்னாடை போர்த்திப் பதக்கம் அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கப் பெற்று பேராசிரியர் இரா.நாகசாமி, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர், கலாநிதி சு.இராஜவேலு, கலாநிதி ஆ.பத்மாவதி, கலாநிதி இரா.கலைக்கோவன், பேராசிரியர் வி.சிவசாமி ஆகியோர் கௌரவம் பெற்றனர்.

ஆய்வரங்கின் சிறப்புப் சொற்பொழிவை அரங்கின் சிறப்பு விருந்தினரும் தமிழ்நாடு தொல்லியல் துறை முன்னை நாள் பணிப்பாளருமான கலாநிதி இரா.நாகசாமி நிகழ்த்தினார். பல்லவர்கால ஓலைச்சுவடிகள், கற்சாசனங்கள், செப்புப்பட்டயங்கள் என்பவற்றின் மூலம் பெறப்படும் பல்லவர்கால நிர்வாகம், ஆட்சிமுறை, மொழி, சமயம் போன்ற பல தகவல்களை விவரித்தார். பெங்காலிக் கவிஞர் கௌதம புத்தரைப் போற்றிப் பாடி இருப்பது பற்றியும் "ஆவரதேவஜர்" எனப்படும் ஒளிவட்டங்கள் புத்தபெருமானைச் சுற்றிக் காணப்பட்டமை பற்றியும், புத்த ஸ்தூபிகள், புத்தர் மூவரதும் சிலைகள், சிவன் கோவில், விஷ்ணு கோவில், புத்தகோவில்களில் அமைக்கப்பட்டிருந்ததாகவும் சமயங்கள் ஒன்றிணைந்த தொடர்புடையதாகவும் காணப்பட்ட தகவலையும் விவரித்தார். மகாபலிபுரக் கல்வெட்டொன்றில் பத்து அவதாரங்களில் புத்தபிரான் ஒன்பதாவது அவதாரமாகக் குறிப்பிட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார். 'தெய்வ சக்திகளின் மத்தியில் நான் வாழ்கிறேன்' என்ற உணர்வில் மக்கள் வாழ்ந்ததாகவும் கூறிய அவர் பக்தி மார்க்கத்தில் மக்கள் ஸ்திரமான பக்தியுடையவர்களாக இருந்தமையை திருமுறைப் பாடல்களை ஆதாரங்காட்டி விளக்கினார். ஸ்ரீ நடராஜப் பெருமானின் சிலையைச் சிலாகித்துப் பேசிய அவர் மேற்குலகிற்கு நடராஜப் பெருமானின் மகத்துவங்களை எடுத்துக் காட்டியவர் கலாநிதி ஆனந்த குமாரசாமி அவர்கள் என்பதையும், நடராஜர் வழிபாட்டு முறைகளை முதலில் எடுத்துக் கூறியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் என்றும் எடுத்துக்காட்டி இலங்கை நாட்டின் பெருமைகளை விளம்பினார். மேலும் ஆழ்வார்கள் நோக்கில் வைஷ்ணவம் என்பது குறித்துப் பேசுகையில் ஒப்புயர்வற்ற நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியின் முதற்பாடலாகிய "உயர்வற உயர்நலமுடையவவெனவ" என்ற பாடலில் இறைவனுடைய கல்யாணக் குணங்கள் பேசப்பட்டிருக்கும் சிறப்புக்களை விளக்கி அந்தப் பாடலில் எந்தக் கடவுள் பெயரும் சுட்டப்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்தினார். "நகரோஷகாஞ்சி" எனப் போற்றப்பெற்ற காஞ்சி நகர் பற்றியும் விபரித்தார். பல்லவர்கால சமண, பௌத்த, சைவ, வைஷ்ணவ சமயங்களிலே போற்றப்படக்கூடிய பல கூறுகளைத் தனது சிறப்புரையில் கூறினார்.

சிறப்பு விருந்தினரான ஓய்வு நிலைப் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் அவர் தம் சிறப்புரையில் இந்துப் பண்பாட்டில் பக்திநெறி என்னும் போது பல்லவர் காலமே நினைவிற்கு வருவதாகக் கூறிய அவர் உலகமயமாக்கல் என்பது மிக வேகமாக முன்னேறிக்கொண்டு வருவதாகவும் ஆயினும் சமயம், இலக்கியம், பண்பாடு இவற்றில் சிறந்து விளங்கும் நாடே உயர்வடைய முடியும் என்பதனையும் எடுத்து விளக்கினார். கோயிலின் பண்பாட்டை அடித்தளமாகக்

கொண்டதே நமது பண்பாடு என்றும் தமிழ் மக்கள் சென்றேறிய உலக நாடுகள் அனைத்திலும் பண்பாடு பற்றிய சிந்தனைச் செல்வாக்குச் செலுத்துவதாகவும் உதாரணங்களுடன் விளக்கமளித்தார். இந்தியாவின் நாகரீகத்தை விளங்கிக் கொள்வதற்குத் தென்னிந்திய நாகரிகம், தமிழர் தம் நாகரிகம் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்தினார். இவ்வாய்வரங்கமானது தமிழ் நாட்டினதும் இலங்கையினதும் சிந்தனையாளர்களை இணைத்துப் புதிய சிந்தனைகள் தோன்றுவதற்கு வழிவகுப்பதாகவும் கருத்து வெளியிட்டார். இந்தியாவில் எழுதப்பெற்ற கந்தபுராணத்தின் பண்பாடு யாழ்ப்பாணத்திலே நிலைபெற்றுள்ளதை விவரித்த அவர் மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய விசேடங்களை இலங்கையின் கோயில்களை மேற்கோள்காட்டி விளக்கினார். இந்துசமய கலாசாரத் திணைக்களம் சமய நடவடிக்கைகள் சம்பந்தமாக மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டினார்.

மாண்புமிகு அமைச்சருடன் அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்ட ஆய்வரங்கின் தொடக்க வைபவ நிகழ்ச்சிகளைத் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் உதவிப் பணிப்பாளர் திரு ம.சண்முகநாதன் நெறிப்படுத்தியமை சிறப்புற அமைந்திருந்தது. ஆய்வரங்கின் மூன்று நாட்களிலும் வெவ்வேறு தலைமைகளின் கீழ் பல அமர்வுகள் இடம்பெற்றன. அவ்வமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகளை உள்நாட்டு அறிஞர்களும் தமிழக அறிஞர்களும் சமர்ப்பித்தனர்.

பல்லவர்கால வரலாற்றுச் சான்றுகளான ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், சாசனங்கள் இவற்றின் மூலம் அக்கால அரசர்களின் பெயர்கள், ஆட்சிமுறை இடம்பெற்ற போர்கள், கோயில்களுக்கு வழங்கப்பெற்ற நிவந்தங்கள், கட்டிடங்கள் பற்றி தகவல்கள் ஆகியவற்றை ஆய்வுரைகள் வெளிப்படுத்தின. தமிழகத்தில் கிடைக்கப்பெறும் கல்வெட்டொன்றில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பெயர்களும், அங்கிருந்தவர்கள் வழங்கிய கொடைகளும் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆய்வுகள் மூலம் அறிய முடிந்தது. கோயில்களுக்கு வழங்கப்பட்ட தானங்களில் சந்திர சூரியர் இருக்கும் வரை கோயில்களுக்கு விளக்கிடுவதற்கான நெய்யினைப் பெறுவதற்கு ஆடுகள், பசுக்கள் கொடையாக வழங்கப்பட்டமை 'சாவா மூவா பேராடு' என்ற பதம் மூலம் சிறப்பாகச் சாசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதும், கோயில்களுக்குத் தடையின்றி விளக்கேற்றப்பட வேண்டும் என்பதில் பல்லவ அரசர்கள் காட்டிய அக்கறை பற்றியும் சாசனத் தகவல்கள் வெளியிடுவது பற்றியும் ஆய்வுகள் வெளிப்படுத்தின.

பல்லவர்கால மொழி பற்றிய சிறப்பான ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒளிப்பட உதவியுடன் அக்கால சாசனங்களில் காணப்படும் வட்ட எழுத்துக்கள், பிராமி எழுத்துக்களின் வரிவடிவங்கள் விளக்கப்பட்டன. தமிழ்ப்பிராமி, அசோகப் பிராமி, தட்டெழுத்து முறை, வடமொழி, தமிழ்மொழி என்பன பல்லவர் காலத்தில் எந்நிலையில் இருந்தன என்பதும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

உலகமே வியந்து நோக்கும் மாமல்லபுரத்துச் சிற்பங்களை ஒளிப்பட உதவியுடன் சபையோருக்குக் காட்டிவிளக்கமளிக்கப்பட்டது. உலகளந்த பெருமாள், ஆதிவிராசர், மகிஷாசுரமர்த்தனி போன்ற பதினான்கு குடைவரைக் கோயில்களின் சிற்ப அம்சங்கள் விரிவாக விளக்கப்பட்டன. புடைப்புச் சிற்பங்களில் காணப்படும் காட்சிகளின் அமைப்பு அரசர்கள், மனிதர்கள், மிருகங்கள் ஆகிய சிற்ப வடிவங்களின் நேர்த்திகள் என்பன நன்கு விபரிக்கப்பட்டன. அர்ஜுனன் தவக்காட்சி என்ற படைப்புச் சிற்பத்தின் ஒவ்வொரு அம்சமும் படத்தின் உதவியோடு சிறப்பாக விளக்கப்பட்டது. அவ்வாறே வைஷ்ணவத் திருத்தலங்களின் அமைப்பும் ஒளிப்பட உதவியுடன் விளக்கப்பட்டது. திருக்கண்ணபுரம், திருவாலிநகர், திருஎவ்வளூர் ஆகிய தலங்களில் காணும் சிறப்புக்கள் குறிப்பிட்டுக் கூறப்பட்டன. கும்பிடுவதோடு அமைந்துவிடாமல் கோயில்களின் அமைப்புக்களில் காணப்படும் அம்சங்களிலும் அக்கறை வேண்டும் என்பதனைக் கோயில்களின் தாங்குதளம், அதிஷ்டானம், வேதிகை, சுவர், கூரை, மண்டபம், விமானம், மாடக்கோயில் என்பவை பற்றிய விளக்கம் மூலம் ஆய்வாளர் தெளிவுபடுத்தினார். கோயிலின் ஒவ்வொரு அங்கத்தையும் பக்தி ரசனையுடன் அனுபவிக்க வேண்டும் என்ற கருத்து வலுவாக்கப்பட்டது. தெய்வத் திருமேனிகளின் அலங்காரம் கண்கொள்ளாக் காட்சியாக அதிசயிக்க வைப்பதுண்டு. பல்லவர் காலத்தில் வடிக்கப்பட்ட சிற்பங்களும் அணிகலன்கள் நேர்த்தியாக வைக்கப்பட்டிருப்பதனையும் அவற்றின் பெயர்களையும் அறியமுடிந்தது. பொன்னாலும் மணியாலுமான தெய்வ அணிகலன்கள் பற்றி இலக்கிய ஆதாரங்களுடன் விளக்கப்பட்டன.

பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்ற புண்ணிய மூர்த்திகளான திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரின் திருமுறைப் பாடல்களும், நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோரது திவ்வியப் பிரபந்தப் பாடலகளும் எவ்வாறு ஆன்மாவிற்கும் உலகிற்கும் கடவுளுக்குமிடையிலான தொடர்புகளை தாசமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கம் ஆகிய பாவங்களூடாகவும் வாத்சல்யம், தாசியம், சகியம், சாந்தம், காந்தம், மதுரம், சாத்வீகம் ஆகிய பாவங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தினர் என்பது பல ஆய்வாளர்களால் விளக்கப்பட்டது. அவர்தம் பாடல்களில் காணப்படும் புராணக் கதைகளில் இராவணன் பற்றி எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பது விசேடமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் அப்பாடல்கள் வெளிப்படுத்தும் சமயக் கோட்பாடுகளும் விபரிக்கப்பட்டன. அத்தோடு பல்லவர்கால சமண, பௌத்த சமய நிலை பற்றியும், வேதங்கள் ஆகமங்களின் நிலை பற்றியும் இதர பல விடயங்கள் பற்றியும் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

## திணைக்கள வெளியீடுகள்

திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவினரால் நடத்தப்படும் ஆய்வரங்கு இவ்வருடம் யூன் மாதம் 29, 30, யூலை 01ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. ஆய்வரங்கின் ஆரம்பநாள் நிகழ்வின்போது 'பக்திநெறியும் பண்பாட்டுக் கோலங்களும்' என்ற சிறப்பு மலரும் 'சங்ககால இலக்கியமும் சமூகமும்' என்ற நூலும் சமய விவகார அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பக்திநெறியும் பண்பாட்டுக் கோலங்களும் என்ற சிறப்பு மலரில் பேராசிரியர் சி.பத்மநாதனின் இலங்கையில் பல்லவர் கலாசாரம், பல்லவர் கலைப்பாணி, கோயில்களும் சிற்பங்களும், பல்லவர் காலத் தமிழகம், பண்பாட்டுக் கோலங்கள் ஆகிய விளக்கமான கட்டுரைகளும், முனைவர் நடன காசிநாதனின் பல்லவர் பாண்டியர் காலச் செப்பேடுகளும் கல்வெட்டுக்களும், பல்லவர்கால காசுகள், இரா.கலை கோவனின் கொற்றவைத் தளி (மாமல்லபுரம் பஞ்சபாண்டவர் ரதங்கள் என அழைக்கப்படும் பல்லவர் கால ஒற்றைக் கற்றளிகளில் கொற்றவைக்குரிய கற்றளி) மற்றும் மு.நளினி - இரா.கலைக்கோவன் ஆகியோரின் மாமண்டூர் நரசமங்கலம் குடவரைகள் முனைவர் செ.வைத்தியலிங்கனின் கலைக்கருவூலங்கள், பேராசிரியர் வி.சிவசாமியின் பல்லவர் பாண்டியகால நடனம், பல்லவர் காலச் சமயநிலை ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது.

எமது திணைக்களத்தால் 2006 நவம்பர் 03, 04, 05 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு "சங்க இலக்கியமும் சமூகமும்" என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியின் சங்ககாலமும் இலக்கியமும் ஆய்வின் -மாறும் பரிமாணங்கள், பேராசிரியர் சி.பத்மநாதனின் "தமிழ்ப் பிராமிச்சாசனங்கள்", இரா.கிருஷ்ணமூர்த்தியின் சங்ககாலக் காசுகள், பேராசிரியர் வி.சிவசாமியின் சங்க இலக்கியத்தின் வைதீகச் சிந்தனைகள், பேராசிரியர் அ.சண்முகதாஸின் சங்க இலக்கியத்தில் வைணவம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாடு, பேராசிரியர் க.அருணாசலத்தின் மதுரைக் காஞ்சியில் அக்கால மக்களின் வாழ்வியல் அம்சங்கள், நாச்சியார் செல்வநாயகத்தின் பரிபாடலில் வைதீகநெறி, சோதிமலர் ரவீந்திரனின் சங்ககாலச் சமயாசாரங்களும் நம்பிக்கைகளும், செ.யோகராசாவின் சங்ககால மகளிர், பேராசிரியர் சோ. கிருஸ்ணராசாவின் சங்ககால சமூகமும் சமய மெய்யியற் சிந்தனைகளும் முனைவர் பெ.மாதையனின் சங்ககாலச் சமுதாயப் பிரிவு - குடும்பம், திருமதி வசந்தா வைத்தியநாதனின் சங்கக் குயில்கள், திருமதி விக்னேஸ்வரி பவநேசனின் சங்க இலக்கியங்களில் பெண்கள், கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணியின் சங்ககாலப் பண்பாடு (கலை வெளிப்பாடு, விருட்சங்கள், விலங்குகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு), கனகசபாபதி நாகேஸ்வரனின் சங்ககால வாழ்க்கை முறையில் ஆடைகளும் அணிகளும், கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்ரமணியத்தின் சங்க இலக்கியங்களில் வாசனைத் திரவியங்களும் அவற்றின் பயன்பாடும், பெ.மாதையனின் பட்டினப் பாலையின் கவிதையியல், ஸ்ரீ பிரசாந்தனின் சங்க அகத்திணை மரபும் காமத்துப்பாலும், திரு. மார்க்கண்டன் ரூபவதனனின் ஊடலும் ஊடல் நிமித்தமும், திரு. எஸ்.துஷ்யந்தின் கலித்தொகையில் அறக்கருத்துக்கள் ஆகிய 21 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல்களில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் உயர்கல்வி பயிலும் அனைத்து தரத்தினருக்கும் பயன்பாடுடைய கட்டுரைகளாக உள்ளன.

# பௌத்த - இந்து ஆன்மீக புரிந்துணர்வு வைபவம்

பௌத்த - இந்து மதங்களுக்கிடையேயான ஒருமைத் தன்மையும் இலங்கைத் திருநாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இவ்வருடம் 19-08, 16-09-2007 ஆகிய திகதிகளில் சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டின்கீழ் பௌத்த, இந்து குருமார்கள், பக்தர்கள், அறநெறிப்பாடசாலை பொறுப்பாளர், ஆலய மன்றத் தலைவர்கள், உறுப்பினர் கள் கலந்துகொண்ட வைபவங்கள் முறையே கொழும்பு- 10 இல் உள்ள குப்பியாவத்தை பௌத்த விகாரையிலும், கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்திலும் நடைபெற்றன. இவ்விழாவில் பிரித், வேதபாராயணம், தியானம், பக்திப்பாடல்கள், பூசை வழிபாடுகள் என்பன இடம்பெற்றன.




பௌத்த - இந்து ஆன்மீக சகோதரத்துவம் (16-09-2007)



இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளும், இந்துக் குருமாரும் ஆசியுரை வழங்கும் நிகழ்வு.

பௌத்த - இந்து ஆன்மீக சகோதரத்துவம் (19-08-2007)





கொழும்பு - 10 இல் அமைந்துள்ள ஜயசேகரராம விகாரையில் இடம்பெற்ற வேதபாராயணம் பிரித் ஓதும் வைபவம்.

கண்டி மாவட்டத்தில் 26-08-2007 ஆம் திகதி புண்ணியகிராம விழா நடைபெற்றது. இவ்விழா அபிவிருத்தி உதவியாளர் திருமதி. ம.அன்னலட்சுமியின் ஒருங்கமைப்பின்கீழ் நடைபெற்றது. இவ் விழாவில் பொதுமக்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கண்டி மாவட்டத்தில் நடைபெற்ற புண்ணியகிராம நிகழ்வில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ராஜரட்ணம் அவர்களும் வீரகேசரி ஆசிரியர், பிரமக்குமாரி சகோதரி ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.



26-08-2007 கண்டியில் நடைபெற்ற புண்ணியகிராமம் விழாவில் தியானப் பயிற்சி நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டம்






மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை வழிபாடு

# சமயக் கல்வியும் அது தொடர்பான செயற்பாடுகளும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயற்பாடுகளில் இந்துசமய அறநெறிக்கல்வி என்பது முக்கியமானதோர் செயற்பாடாக அமைகின்றது. இச்செயற்பாட்டின் கீழ் பல் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

1) அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு
2) தர்மாசிரியர் பரீட்சையும் அது தொடர்பான கருத்தரங்குகளும்
3) பண்ணிசைக் கருத்தரங்குகள்
4) அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள், சீருடை வழங்குதல்
5) இந்துசமய அறிவுப்போட்டி
6) நூல்கள் வழங்குதல்

## தர்மாசிரியர் முன்னோடிக் கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஒழுங்குசெய்யப்பட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. இப்பரீட்சைக்குத் தோற்ற

1) அறநெறி இறுதிநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள்
2) உயர்தரத்தில் இந்து சமயம் ஒரு பாடமாகக் கற்று சித்தி பெற்றவர்கள்
3) சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர் பட்டம் பெற்றவர்கள்

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரங்கள் வேதங்களும் ஆகமங்களும், சமயப் பெரியார்கள், கோயில்களும் கலைகளும், பன்னிரு திருமுறைகள், சைவசமய வரலாறு ஆகியனவாகும். இது தொடர்பான முன்னோடிக் கருத்தரங்கு இவ்வாண்டு பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்டன. 13 மாவட்டங்களுக்கான கருத்தரங்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் 01-09-2007 ஆம் ஆண்டு சனிக்கிழமை பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெற்றது. இதில் 130 பரீட்சார்த்திகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

கண்டி மாவட்டத்தில் 04-08-2007 ஆம் திகதி கட்டுக்கலை செல்வவிநாயகர் மண்டபத்தில் தர்மாசிரியர் பரீட்சை முன்னோடிக்கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 50ற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் கலந்துகொண்டு பயனடைந்தனர். யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் முறையே 08-09-2007 01-09-2007 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 400ற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் கலந்து பயனடைந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 15-09-2007 ஆம் திகதி இக்கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 50 பரீட்சார்த்திகள் பயனடைந்தனர். அதேபோன்று வவுனியா மாவட்டத்தில் 08-09-2007 ஆம் திகதி இக்கருத்தரங்கு நடைபெற்றது. 50 பரீட்சார்த்திகள் இதன் மூலம் பயனடைந்தனர். நுவரெலியா மாவட்டத்தில் 08-09-2007 ஆம் திகதி கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கினால் 80 மாணவர்கள் பயனடைந்தனர். தர்மாசிரியர் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தினால் செம்டம்பர் மாதம் 22, 29, 30ஆம் திகதிகளில் நாடு பூராகவும் நடாத்தப்பட்டது.

## இந்து சமய பொது அறிவுப் போட்டி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வருடாவருடம் இந்துசமய அறநெறிப் பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக அகில இலங்கை ரீதியாக அறநெறிப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக இச்செயற்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் 22 மாவட்டங்களைச் சேர்ந்த 25,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். இப்பரீட்சை ஒக்டோபர் மாதம் 07ஆம் திகதி அகில இலங்கை ரீதியாக அந்தந்த மாவட்டங்களிலுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. இதற்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் பிரகாரமே இப்பரீட்சை நடைபெற்றது. இப்போட்டிப் பரீட்சையில் தேசிய, மாவட்ட மட்டத்தில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் முதல் மாணவர்களுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளது.

இந்துசமய கலாசார திணைக்களத்தால் அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்கப்படுகின்றன. அவ்வகையில் கொழும்பு, புத்தளம், இரத்தினபுரி, களுத்துறை, கேகாலை, குருநாகல், திருகோணமலை, நுவரெலியா, பதுளை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு இன்னும் வழங்கவேண்டிய நிலையிலுள்ளது.

## அறநெறி ஆசிரியர் கருத்தரங்கு

புத்தளம், குருநாகல் மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 27-05-2007 ஆம் திகதி புத்தளம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 111 அறநெறி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கு திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். தெய்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அறநெறி இறுதிநிலைப் பரீட்சைப் பாடத்திட்டத்திற்கு அமைவாக இந்துசமய வரலாறு, இந்து சமய இலக்கியம், இந்து சமய வாழ்வியல், இந்துசமய மெய்யியல் என்னும் தலைப்புக்களில் முறையே திருமதி நித்தியவதி நித்தியானந்தன், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், திருமதி தேவகுமாரி ஹரன், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர்கள் விரிவுரைகள் ஆற்றினர்.

நுவரெலியா மாவட்ட அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 16-06-2007 ஆம் திகதி ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும், 17-06-2007 நுவரெலியா திரித்துவக் கல்லூரியிலும் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு உதவிப் பணிப்பாளர் திரு. எஸ்.தெய்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. முறையே 21, 24 அறநெறி ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்து பயன்பெற்றனர்.

பதுளை மாவட்டத்தில் இவ்ஆசிரியர் கருத்தரங்கு 25, 26-06-2007 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் சைவப்புலவர் சு.செல்லத்துரை, திரு.என்.சேதுரட்ணம் ஆகியோர் விரிவுரை வழங்கினர். இக்கருத்தரங்கினால் 210 ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 11, 12-06-2007 ஆம் திகதிகளில் கருத்தரங்கு நடைபெற்றது. 150 ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். திருமதி சிவனொளிபாதம், திரு.ஸ்ரீஸ்கந்தராசா. திரு.செ.சிவஞானம், திரு.தயாபரசிவம் ஆகியோர் இக்கருத்தரங்கில் விரிவுரையாற்றினர். வவுனியா மாவட்டக்கருத்தரங்கு 04-08-2007 ஆம் திகதி நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 75 ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். திரு. தர்மராசா, திரு.ஆ.கௌரீகாந்தன், திரு.பார்த்தீபன், திருமதி. யோகலட்சுமி சோமசுந்தரம் ஆகியோர் விரிவுரையாற்றினர். திருகோணமலை மாவட்டக் கருத்தரங்கு 25-08-02007 ஆம் திகதி நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 200 பேர் கலந்துகொண்டனர். திரு. மதியழகன், திருமதி. சி.பத்மநாதன், திரு.என்.பத்மசீலன், திரு.ஏ.எஸ்.-சோதிமலர் ஆகியோர் விரிவுரையாற்றினர். இக்கருத்தரங்கின் போது அறநெறி ஆசிரியர்களுக்கான சான்றிதழ்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.

## இந்து தர்மாசிரியர் பரீட்சை

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்திய இந்து தர்மாசிரியர் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் நாடு பூராகவும் நடத்தப்பட்டது. கடந்த செப்டம்பர் 22, 29, 30ஆம் திகதிகளில் இலங்கை பூராகவும் நடைபெற்ற இப்பரீட்சைக்கு ஏறக்குறைய 7,500 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சையில் 70 சதவீதமான பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளனர். அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறநெறிப்பாடசாலையில் முதுநிலைப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இந்துநாகரிகம் அல்லது இந்துசமயம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி பெற்றவர்களாவர்.

இவ்வாண்டு இப்பரீட்சையில் கூடுதலான பரீட்சார்த்திகள் சித்தியடைவர் எனத் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. தர்மாசிரியர் பரீட்சை அறநெறிப்பாடசாலை முதுநிலைப் பரீட்சைகளில் சித்தியடைந்த

அறநெறிபாடசாலை ஆசிரியர்களுக்குச் சிறந்த மேலதிக திறமையாகக் கருதி முன்னேற்றகரமான தொழில்வாய்ப்பைப் பெறுவதற்குத் தகைமை பெற்றவர்களாகக் கருதப்படுவர்.

## இந்து சமயப் போட்டிப் பரீட்சை

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்துசமய போட்டிப் பரீட்சை அக்டோபர் மாதம் 7ஆம் திகதி நாடு பூராகவும் நடத்தப்பட்டது.

பாடசாலை அதிபர்களின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட பரீட்சைக்கு இணைப்பாளர்களாகத் திணைக்களத்தின் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் கடமைபுரிந்தனர்.

இப்பரீட்சைக்கு ஏறக்குறைய 23,000 பரீட்சார்த்திகள் கலந்து கொண்டனர். அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு எனத் தரப்படுத்தி நடத்தப்பட்ட இப்பரீட்சை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் வழிகாட்டலிலும் உதவிப் பணிப்பாளர் திருமதி குமரன் ஹேமலோஜினியின் நெறிப்படுத்தலிலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## துளசி

விஷ்ணுவின் மிகப் பிரியமான அர்ச்சனைப் பொருள் துளசியாகும். துளசி என்ற சொல்லுக்குத் தன்னிகரில்லாதவள் என்று பெயர். வைணவ சம்பிரதாயத்தில் துளசியைத் திருத்துழாய் என்பார்கள். மகாலட்சுமியின் சொரூபமாக துளசி கருதப்படுகின்றதோடு எப்போதும் திருமாலின் திருமார்பையும் அலங்கரிக்கின்றது. துளசியின் வேரில் தேவதைகள் வாசம் செய்கிறார்கள் என்றும் கருதப்படுகின்றது.

## தைப்பொங்கல்

இன்று தமிழர் வாழும் பிரதேசங்களில் தைமாதம் முதல் நாளில் கொண்டாடப்படும் பொங்கல் விழா சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விழா என்றவாறாகவே கொண்டாடப்படுகிறது. அதனால் அதனைச் சூரிய பொங்கல் என்றும் அழைப்பர். வீட்டிலே கொண்டாடப்பெறுவதால் வீட்டுப் பொங்கல் என்றும் வீட்டு வாசலில் முற்றத்தில் பொங்கப் பெறுவதால் வாசற் பொங்கல் என்றும் தமிழகத்துப் பிரதேசங்களில் வழங்கப்பெறுகிறது. அறுவடைக் காலத்தில் 'பொலியோ பொலி' என்று குரல் எழுப்பி சூடுமிதிப்பது வழக்கம். பொங்கல் விழாவில் பால் பொங்கும் போது 'பொங்கலோ பொங்கல்' என்றும் ஒலித்து மகிழ்வர்.

# ஆலயங்களும் அதன் அபிவிருத்தியும்

இந்து சமய அபிவிருத்தி தொடர்பாகப் பலவிதமான செயற்பாடுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக இந்து ஆலயங்கள், இந்து மன்றங்கள், சிறுவர் இல்லங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வருடம் கடந்த மூன்று மாத காலத்தினுள் வழங்கப்பட்ட நிதி விபரம் வருமாறு: -

| **சிறுவர் இல்லம்** | **வழங்கப்பட்ட தொகை** |
|---|---|
| 1) சீர்பாததேவி சிறுவர் இல்லம், வீரமுனை, சம்மாந்துறை | 25,000 |
| 2) அன்பு இல்லம், மத்திய வீதி, திருகோணமலை | 69,000 |
| 3) நலிவுற்றோர் நலன்காப்பு நிதியம், அன்னையில்லம், உப்புக்குளம் | 48,000 |
| 4) திருஞானசம்பந்தர் குருகுலம், களுதாவளை, களுவாஞ்சிக்குடி | 65,000 |
| **இந்து மன்றங்கள்** | |
| 5) தெய்வநெறிக்கழகம், கோட்டைக்கல்லாறு, கல்லாறு | 50,000 |
| 6) இந்து இளைஞர் மன்றம், ஏறாவூர், செங்கலடி | 100,000 |
| 7) இந்துமகாசபை, அனுராதபுர வீதி, புத்தளம் | 100,000 |
| 8) இந்துசமய கலை கலாசார மன்றம், கொழும்பு | 100,000 |
| 9) வள்ளுவர் அறநெறிமன்றம், மட்டக்குளி | 50,000 |
| 10) கதிர்காம யாத்திரை சங்கம், கொழும்பு | 10,000 |
| **ஆலயங்கள்** | |
| 11) ஸ்ரீகாளி அம்பாள் ஆலயம், பதுளை | 100,000 |
| 12) ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், பதுளை | 50,000 |
| 13) ஸ்ரீ சிவசுப்ரமணியர் ஆலயம், ஹாலிஎல | |
| 14) ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், நுவரெலியா | 100,000 |
| 15) ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், மன்னம்பிட்டிய | 100,000 |
| 16) ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், சிலாபம் | 50,000 |
| 17) ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், நிவத்திகல | 50,000 |
| 18) ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம், மடுல்சீமை | 75,000 |

# சிறிய ஆலயங்களுக்கான பூசை நடைமுறை விதிகள் சில:

திரு.எஸ்.தெய்வநாயகம் (உதவிப்பணிப்பாளர்)

## ஆலயம்:

இறைவனை, மனதை ஒருநிலைப்படுத்தி மெய்யுருக நெஞ்சுருக வழிபடும் இடம். இது அமைதியான இயற்கைச் சூழ்நிலையில் அமைதல் வேண்டும். மூலஸ்தானத்தில் இறைவனையோ அல்லது இறைவியையோ வைத்து வழிபடுவது ஆலயத்திற்குச் சிறப்பைத்தரும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி. எனவே அதற்கேற்ற முறையில் சிறியதாக ஆலயம் இருந்தாலும் அதைப் புனிதமாகப் பேணி நிர்வகிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## மூலஸ்தானத்தை கற்சிலை சுவாமியை சுத்தமாக வைத்திருத்தல்:

இறைவன் உறையும் கர்ப்பக் கிரகம் அதாவது மூலஸ்தானம் எப்பொழுதும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும. மூலஸ்தான கற்சிலை சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு நாளாந்தம் சாத்துதல் அவசியம். நாளாந்தம் எண்ணெய்க் காப்பு வைக்க முடியாதவர்கள் ஒரு கிழமைக்கு ஒரு தடவையேனும் சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு வைத்தல் வேண்டும். எண்ணெய்க் காப்பு பெரும்பாலும் நல்லெண்ணெய் கொண்டதாக அமையும். மாக்காப்பும் இடையிடை சாத்துதல் அவசியம்.

இது புளித்த தயிர், அரிசிமா முதலியவைகளைக் கொண்டதாக அமைவுபெறும். கற்சிலை சுவாமியில் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்ற இது பெரும்பாலும் உதவும். நீரினால் அபிஷேகங்கள் நடைபெற்று, சுவாமி அலங்காரம் செய்யப்படுவதற்கு முன் சுத்தமான துணியினால் கற்சிலை சுவாமியை நன்றாகத் துடைத்து தண்ணீர் சுவாமியில் ஒட்டியிராமல் பார்க்க வேண்டும். கற்சிலை இல்லாமல் ஐம்பொன் உலோகத்தில் சுவாமி மூலஸ்தானத்தில் இருந்தால் எண்ணெய்க் காப்பு தவிர்த்து புளிக்காப்பு இடுவது மிகவும் மேலானது.

## மூலஸ்தான நிலம்:

மூலஸ்தானத்தில் அழுக்குச் சேராமல் பார்த்துக் கொள்வது மிகநன்று. அடிக்கடி அபிஷேகங்கள் நடைபெறுவதால், பழங்கள் மற்றும் பொருட்களின் சாறுகள் தேங்கி நின்று துர்நாற்றத்தை ஏற்படுத்தலாம். இதற்கு சலவைச் சோடா போட்டு நிலத்தைத் துப்பரவு செய்தல் வேண்டும். ஆலயத்தில் அமைந்துள்ள விளக்குகளை எப்பொழுதும் துப்புரவாக வைத்திருத்தல் மிகவும் நல்லது. அடிக்கடி புளிக்காப்பிட்டு விளக்குகளை துப்பரவு செய்யலாம். எண்ணெய், திரி என்பன குறையாமல் பார்த்துக் கொள்ளல் விரும்பத்தக்கது. மூலஸ்தானத்தில் அபிஷேகம் செய்யும்போது தயிர், பால், பழங்களின் சாறுகள் மூலஸ்தான சுவர் மூலைகளில் சென்று உறைந்து நிற்கும். அவைகளை கரண்டியினால் அள்ளி வெளியில் வீசிவிட வேண்டும். இல்லையேல் அதிகநாள் அப்படி தேங்கி நின்று அவைகள் புழுப்பிடிக்க வாய்ப்பு உண்டாகும். இப்படி ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

## சுவாமிக்கு சாத்தும் பட்டு:

மூலஸ்தான சுவாமிக்கு சாத்தும் பட்டு எப்பொழுதும் துப்பரவாக இருத்தல் வேண்டும். புதிய பட்டுக்கள் அடிக்கடி சாத்த முடியாதவர்கள் பழைய பட்டுகளை நாளாந்தம் துவைத்து சுவாமிக்கு சாத்தலாம். அத்தோடு திரைச்சீலைகள் யாவும் அழுக்குப்பிடியாமல் துப்பரவாக இருத்தல் வேண்டும். திரைச்சீலைகளில் கைகளைத் துடைப்பதும் சுவாமிக்கு சாத்தும் பட்டில் கை, முகம் துடைப்பதையும் எக்காரணம் கொண்டும் செய்தல் ஆகாது.

## புறவீதிகளின் சுத்தம்:

கோயில்களில் உள்ள உள்வீதி, வெளிவீதிகள் துப்பரவு செய்து சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல் மேலானது. புல், பூண்டுகள், அழுக்குகள்,

குப்பைகூழங்கள் சேராமல் மேற்படி வீதிகளை பார்த்துக் கொள்ளல் மிக அவசியம். வாராந்தம் ஒரு நாளிலாவது ஆலயத்தை தண்ணீர்விட்டுக் கழுவுதல் வேண்டும். சிறிய ஆலயங்களில் ஒவ்வொரு நாளும் ஆலயங்கள் தண்ணீர்விட்டு சுத்திகரிப்பது விரும்பத்தக்கது. அபிஷேகம் செய்யும் தண்ணீர், பால், பழச்சாறுகள் புறவீதிகளில் தேங்கி நிற்காமல் அவைகளை தூரத்தில் கொண்டு செல்ல வடிகால் அமைப்பது சிறப்பானது.

ஆலயங்களில் மூலஸ்தானம் மற்றும் சுற்றுப்புற கோயில்களில் உள்ள பகுதிகளில் நாய், பூனை போன்றவைகள் உட்சென்று அசுத்தம் செய்யாமல் பார்த்துக் கொள்வது மிகவும் நன்று. இதற்குக் கதவுகள் போட்டு பூட்டிவைக்கலாம். திருமெழுக்கிடுதல், தூபங்கள் போடுதல், ஆலயத்திற்கு மிகவும் சுகந்தத்தை ஏற்படுத்தும். கற்பூரங்கள் பற்றவைப்பதற்கு ஏற்ற தட்டுக்களை உரிய இடத்தில் வைத்தல் நல்லது. கண்ட கண்ட இடங்களில் கற்பூரம் கொழுத்துவது நல்லதல்ல. கற்பூரம் எந்த இடத்தில் பற்றவைக்க வேண்டுமோ அந்த இடத்திலேயே அவை பற்றவைக்க வேண்டும். அதற்கு தனியான பாத்திரம் உரிய இடத்தில் வைத்துப் பேணப்படவேண்டும். எல்லா இடங்களிலும் கற்பூரம் கொழுத்துவதால் ஆலயம் புகைபடியும் தன்மைக்கு ஆளாகும்.

## பூசை நடைமுறைகள்:

ஆலயங்களில் பூசைகள் தினசரி காலை, பகல், மாலை நடத்தல் வேண்டும். பகல் நடத்த முடியாவிட்டால் காலையும் மாலையும் கண்டிப்பாக பூசைகள் இடம்பெறுவது மிகவும் நன்மை பயக்கும். வெள்ளிக்கிழமைகளில் பூசைகள் சிறப்பாகவும் கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகளுடன் இடம்பெறுவது சமய உணர்வை எல்லோருக்கும் ஏற்படுத்தக்கூடியதாக அமையும். காலைப்பூசை 5.30 மணியிலிருந்து 7.00 மணிக்குள்ளும் மாலைப் பூசை 6.00 மணியிலிருந்து 7.00 மணிக்குள்ளும் நடைபெறுவது விரும்பத்தக்கது. இரு பூசைகளும் செய்யமுடியாத ஆலயங்களில் மாலையில் மாத்திரமாவது விளக்கு வைத்தல் அவசியம். நாளாந்தம் விளக்கு வைத்து வழிபடும் அளவிலாவது ஒரு ஆலயம் அமைந்திருப்பது மிகவும் அவசியம்.

## அர்ச்சகர் அல்லது பூசகர் ஒழுக்கம்:

பூசை செய்பவர்கள் சமயதீட்சை பெற்றிருத்தல் மிகவும் அவசியம் அல்லது சமய அனுட்டானங்கள் நன்கு தெரிந்தவராக அமைதல் வேண்டும். அவருடைய உடுப்புகள் சுத்தமாக இருத்தல் வேண்டும். அழுக்கடைந்த ஆடைகளை அணிதல் கூடாது. தோய்த்துலர்ந்த ஆடைகளை நாளாந்தம் அணிதல் விரும்பத்தக்கது. மதுபானம் அருந்தாதவராகவும் மாமிசம் உண்ணாதவராகவும் இருத்தல் வேண்டும். கெட்ட எண்ணங்களுக்கு மனதை அலைக்கழிப்பவராக இருத்தல் கூடாது. குரு உபதேசம் பெற்றால் மந்திரம் சொல்லலாம். இல்லையேல் நாமவழி உச்சரிக்கலாம் அல்லது இறையருள் மிக்க பாடல்களைப் பாடிப் பூசைகள் செய்யலாம். அம்மன் மற்றும் தெய்வப் பாடல்கள் அம்மன் ஆலயங்களில் இடம்பெறுதல் விரும்பத்தக்கது. பூசை செய்யும்போது மதுபானம், மாமிசம் அருந்திருயிருத்தல், புகைத்தல், வெற்றிலை சாப்பிடல் கூடாது.

## பிரசாதம்:

இறைவனின் பிரசாதம் எனக் குறிப்பிடப்படுவது திருநீறு, தீர்த்தம், பொட்டு, பூ என்பன. இவைகள் வணங்கவரும் அடியார்களுக்கு ஒரு ஆலயத்தில் கண்டிப்பாக கொடுக்கப்படல் வேண்டும். இவைகள் கொடுக்கப்படும் போது அவைகளுக்குரிய பாத்திரங்கள் நாளாந்தம் துப்புரவு செய்யப்பட்டு தூய்மையுடன் பிரசாதங்கள் வைக்கப்பட்டு வழங்கப்படுதல் மிக அவசியம்.

## பொட்டு:

சந்தனக் கட்டையில் அரைத்ததாகவும் அல்லது கூட்டுப் பொருட்கள் சேர்ந்ததாகவும் அமையலாம். சந்தனம், குங்குமம், மஞ்சள் என்பன பொட்டுகளுக்குப் பயன்படுத்தலாம். தினமும் சந்தனம், குங்குமம் வழங்கும் பாத்திரம் சுத்தப்படுத்தப்பட வேண்டும். பூசைகள் முடிவுற்றதும் அன்றைய தினமே சந்தனம்

வழங்க பாவிக்கப்படும். பாத்திரத்தை சந்தனத்தைக் கொட்டி வேறு பாத்திரத்தில் வைத்துவிட்டு கழுவி சுத்தம் செய்து துடைத்து வைக்க வேண்டும். அடுத்த நாள் சந்தனம் போட்டு வழங்குவது சிறப்பாக இருக்கும். இது துர்மணம் பிடிப்பதைத் தவிர்க்கும்.

## ஆலய உபயோகப் பொருட்கள்:

வீட்டில் பாவனையில் உள்ள பொருட்களை ஆலயப் பாவனைக்கு உபயோகப்படுத்தல் ஆகாது. ஆலயத்தின் மடப்பள்ளி பாவனைக்கும், உள்பாவனைக்கும் வெவ்வேறான பாத்திரங்களை உபயோகப்படுத்தல் வேண்டும். சிலர் வீட்டிலிருந்து பாத்திரங்களை கொண்டுவந்து ஆலயத்திற்கு பயன்படுத்துவதும் பின் வீட்டிற்கு கொண்டு செல்வதும் உண்டு. இது மிகவும் பாதகமான செயல். இதைத் தவிர்த்து தனித்தனியாக பாத்திரங்களை உபயோகப்படுத்தல் வேண்டும்.

## நந்தவனம்:

மல்லிகை, துளசி, நந்தியாவட்டம், எலுமிச்சை, செவ்வரத்தை, பவளமல்லிகை போன்ற பூசைக்கு உகந்த பூமரங்களும் கொடிமல்லிகை, நீலாம்பரம், தாமரை போன்ற கொடி நீர்ப்பூக்களும் நந்தவனங்களில் அமைவுபெறுதல் சிறப்பாகும். ஓரளவு இந்த நந்தவனங்களில் இருந்தே பூசைக்குரிய பூக்கள் பெறப்பட வேண்டும். வீடுகளில் இருந்துகொண்டு வரப்படும் மலர்கள் புனிதமாக இருத்தல் அவசியமாகும். பூச்சிகள் கடித்த பூ ஆகியன சாமிக்கு சாத்துவதற்கு எடுக்கக்கூடாது. ஒரு ஆலயத்திற்கு மிகவும் அவசியமானது நந்தவனம். இயற்கையின் சூழலிலேயே இறைவன் இருக்கின்றான். பூசைக்கு தேவையான அத்தனை மலர்களையும் நந்தவனத்தில் வளர்த்திட முயற்சிக்க வேண்டும்.

## சுவாமி தரிசனம்:

சுவாமி தரிசனம் பண்ணும்போது ஆண்கள் ஒரு புறமாகவும் பெண்கள் ஒரு புறமாகவும் நின்று வழிபடுதல் வேண்டும். வரிசைக் கிரமமாக நின்று அல்லது இருந்து வழிபடுதலும் அமைதியாக இருத்தலும் மேலானது. கற்பூர தீபம் காட்டி முடிந்து எமது தரிசனத்துக்கு வரும்போது முண்டியடித்துக் கொண்டு தொட முற்படுவதும் திருநீறு, தீர்த்தம், பொட்டு கொடுக்கும் போது முண்டியடிப்பதும் சிறப்பானதல்ல. பிரசாதம் வாங்கும்போது அமைதியான முறையில் வாங்க ஆலயத்திற்கு வரும் அடியார்களை தயார்படுத்திக் கொள்வது ஆலய நிர்வாகத்தினதும் அர்ச்சகர் பூசகரினதும் தலையாய கடமையாகும்.

## திருவிழா:

நாளாந்தம் பூசை வழிபாடுகள் நடந்து வந்தாலே போதும், திருவிழா செய்ய வேண்டும் என்பதல்ல. வசதி இருப்பின் வருடத்தில் ஒருமுறை வரும் திருவிழாவை சிக்கனமாக இறைவனுக்குரிய அபிஷேக ஆராதனைகளுடன் செய்து முடிப்பது விரும்பத்தக்கது. ஆடம்பரச் செலவுகளும் கேளிக்கைகளும் திருவிழாவில் இடம்பெறுவது முக்கியமல்ல. அன்பர்கள், அடியார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மனமுருக மெய்யுருக இறைவனை வழிபடுவதே மிகவும் முக்கியம். இவைகளை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். எனவே சிறு ஆலயங்களை வழிநடத்தும் ஆலய நிர்வாகஸ்தர்களும், அர்ச்சகர் பூசகர்களும் மேற்காட்டிய நடைமுறை விதிமுறைகளைக் கடைப்பிடித்தால் அதுவே சிறப்பானதொரு ஆலய வழிபாடு அமைய வழிவகுத்தலாகும்.

# ஆலய வழிபாடும் இசைக்கருவிகளும்

செல்வி முருகேசு .பு.யோ.
அதிபர் கொ.முகத்துவாரம் இந்துக்கல்லூரி. கொழும்பு

சிவனடியார்கள் இறைவனை இசைஞானியாகவும் இசைப்பிரியனாகவும் கொண்டனர்.

*"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"*
*- திருநாவுக்கரசர்*

*"பண்ணும் பதமேழும் பல ஓசைத் தமிழ் அவையும் உண்ணின்ற தோர் சுவையும் உறுதாளத் தொலிபலவும்"*
*- திருஞானசம்பந்தர்*

*"ஏழிசையாய் இசைப்பயனாய்" சுந்தரமூர்த்தி நாயனார்*
*"பண்சுமந்த பாடல் பரிசு அருளித்தருளும்"*
*-மாணிக்கவாசகர்*

*"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதர்"*
*- மாணிக்கவாசகர்*

என சைவ நாயன்மார் இறைவனின் இசை-வடிவத்தை விவரித்துள்ளார். சைவ சித்தாந்த தத்துவ மரபில் நாதம் மிகவும் உயரியது. இறைவனின் ஆனந்த தாண்டவத்துடன் பஞ்ச கிருத்தியம் (ஐந்தொழில்) இணைந்துள்ளது. நாதமே வடிவான இறைவனை நாத உபாசனையால் பூசித்துப் போற்றி வழிபட சிறந்த இடங்களாக சிவாலயங்கள் அமைந்துள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி மன்னன் சிவாலயத்தை வழிபாடு செய்த போது முடி தாழ்த்துவான் என அரசனின் பக்தி சிறப்பிக்கப்பட்டது.

இசைக்கருவிகள் பல வகைப்படும். அவற்றை மேல்வரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1) பிருதுவி வாத்தியங்கள் - மரத்தினால் செய்யப்பட்ட கருவிகள்
2) அப்பு வாத்தியங்கள் - சங்கு முதலிய கருவிகள்
3) ஆக்கினேய் வாத்தியங்கள் - உலோகங்களினால் செய்யப்பட்ட கருவிகள்
4) வாயவ்விய வாத்தியங்கள் - துளைகள் உள்ள கருவிகள்
5) ஆகாச வாத்தியங்கள் - இராக பேதங்களை காட்டும் கருவிகள்

## கிரியை நூல் காட்டும் இசைக்கருவிகள்:

மத்தளம், படகம், பேரிகை, சல்லரி, காகளம், ஏகதாளம், பூரி, சங்கு, பேரிவாத்தியம், நாடிவாத்தியம், கும்ப வாத்தியம், பஞ்சமுக வாத்தியம், வீணை, கின்னரவீணை, முகவீணை, வாயுவீணை, தும்புரு வீணை, நாரதவீணை, காந்தருவ வீணை, மிருதங்கம், வேய்ங்குழல் என்பனவாகும்.

தற்காலத்தில் பயன்படும் இசைக்கருவிகள்
நாகசுரம், தவில், தாளம், திருச்சின்னம், கின்னரி, கொம்பு, கஞ்சிரா, பிரம்மதாளம், சேமக்கலம், எக்காளம், தகரா, உடுக்கை, டமாரம், சுத்தமத்தளம், டவண்டை, பம்பை, சூரியபிறை, சந்திரப்பிறை, திமில், நகரா, பறை, பிடில், கிளாரினொட்,

இக்கட்டுரையில் நரம்புக்கருவிகள், தோற்கருவிகள், துளைக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என்ற அமைப்பில் நோக்கப்பட்டுள்ளன.

## நரம்புக்கருவிகள்:

இந்த வகையினுள் பண்டைய தமிழ் இசைக்கருவி-யாகிய யாழ் முதன்மை பெறுகிறது. சங்க காலத்தில் பாணர் என்ற பிரிவினர் இசை வல்லுனராக விளங்-கினர். பெரும்பாணாற்றுப்படை, சிறு பாணாற்றுப்படை என்பன பாணர் வாழ்க்கையைக் காட்டுகிறது. பண்டைய நூல்களில் வில் யாழ், பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், நாரதயாழ், தும்புரு-யாழ், சீரியாழ் என யாழின் வகைகள் இடம்பெற்றுள-ளன.

## யாழ் சிற்பங்கள்:

புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள திருமெய்யம்

பள்ளி கொண்ட பெருமாள் கோவில் கருவறைச்சுவர் மீது காணப்பட்ட யாழ் சிற்பத்தை பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள் விளக்கியுள்ளார். அச்சிற்பத்தில் ரிஷிக் கூட்டத்தின் நடுவில் நாரதர் யாழுடனும் தம்புரா வீணையுடனும் விளங்குகிறார். நாரதர் யாழ் வாசிக்கும் முறையில் காணப்படுகிறார். இந்தச் சிற்பம் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் காலத்திற்குரியது. திரு எருக்கத்தம்புலியூரில் உள்ள திருநீலகண்ட யாழ்ப்பாணர் உருவத்தில் யாழ் காணப்படுகின்றது கும்பகோணத்திற்கு அண்மையில் தாராசுரம் கோவிலிலும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் உருவத்தில் யாழ் உள்ளது,

## யாழ் வாசிக்கும் முறை:

இரு கைகளின் விரல்களினாலும் யாழ் வாசிக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு தந்தியும் ஒவ்வொரு ஸ்வரத்திற்கு சுருதி கூட்டப்பட்டு இருந்தது. சுத்தஸ்வரங்களையே யாழில் வாசிக்க முடிந்தது. கமகங்கள் வாசிக்க யாழில் வசதியில்லை. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் "மாதர் மடப்பிடியும்" என்னும் பதிகம் பாடியபோது திருநீல கண்ட யாழ்ப்பாணர் அந்த பண்ணை யாழில் மீட்ட முடியாது யாழில் மீது வெறுக்கொண்டார் திருஞானசம்பந்தர். திருநீல கண்ட யாழ்ப்பாணரைப் பார்த்து "இது உமது குற்றமல்ல யாழின் குற்றம்" என்று கூறிய விடயத்தை நோக்கலாம். இக்காரணம் பற்றியே இதற்கு யாழ்முறிப்பான் என்னும் பெயர் ஏற்பட்டது. யாழின் பெரிய உருவம் நுட்ப சுருதிகளை யாழில் மீட்ட முடியாமை, சுருதி கூட்ட அதிக நேரம் எடுத்தமை போன்ற காரணங்களினால் உலோக தந்திகளோடு கூடிய வீணை முதன்மை பெற யாழ் மறைய ஆரம்பித்தது என்பர்.

## வீணை:

பண்டைக் காலத்தில் வீணை என்னும் பெயர் பொதுவாக எல்லாத் தந்தி வாத்தியங்களுக்கும் வழங்கப்பட்டு வந்தது. சத தந்திரி வீணை (நூறு தந்திகளை உடையது) காத்யான வீணையில் தந்திகளை சிறு குச்சிகளால் அடித்து நாதத்தை எழுப்பினார். ஏகராகமேள வீணை என்றால் ஒரு நேரத்தில் ஒரு மேளமோ, அல்லது அதன் ஜன்னிய ராகமோ வாசிக்க வசதியுடையது. பிறிதொரு மேளம் வாசிக்க வேண்டுமானால் தேவையான மெட்டுக்களை புதிய தாளத்தில் நகர்த்தி வாசிக்க வேண்டும். சர்வராகமேள வீணையில் எந்த மேளத்தையும் ராகத்தையும் வாசிக்கலாம். தஞ்சாவூர் வீணை சாரங்க தேவரின் சங்கீதரத்னாகரத்திலும் வீணையின் வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (பதின்மூன்றாம் நூற்றாண்டு)

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் வீணை தொடர்பான குறிப்புகள் இல்லை. ஆயினும் கோடு நிமிர்த்தப்பட்ட யாழ் வீணையாக கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இடம்பெறலாயிற்று.

*"பண்ணார்ந்த வீணை பயின்ற விரலவனே" எனவும்*
*"ஏழிசை யாழ் வீணை முரவக் கண்டேன்" எனவும்*
*"எம்மிறை நல்வீணை வாசிக்குமே" எனவும்*

திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிட்டுள்ளார்.

*"இன்னிசை வீணையில் இசைந்தேன்" எனவும்*
*"வீணை முரண்டெழும் ஓசையில் இன்பம் மிகுந்திடும்*

எனவும் மாணிக்கவாசக சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார்.

புராண மரபின்படி தும்புரு நாரதர் ஆகிய முனிவர்களின் பொருட்டு வீணாதார தட்சணாமூர்த்தியாக எழுந்தருளினார். காஞ்சி கைலாசநாதர் கோவிற் சாசனங்கள் (கி.பி. எட்டாம் நூற்றாண்டு) "இராஜசிம்மமன்னன்'' வீணை வாசிப்பதில் நாரதனை ஒத்தவன். இசை வல்லவன் எனக் குறிப்பிட்டுள்ளன. இவ்வாலயத்தில் வீணாதர தட்சணாமூர்த்தி சிற்பங்கள் உள்ளன. பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட வீணாதர தட்சணாமூர்த்தி சிற்பங்கள் பல சிவாலயங்களில் உள்ளன. பூர்வ நூல்களில் நாரதர் வீணாமகரிஷி என குறிப்பிடப்படுகிறார். கலைமகள் கரத்திலும் வீணை உள்ளது.

## வீணையின் அமைப்பு:

குடம், மேற்பலகை, தண்டி, கழுத்து, மாடச்சட்டம், சுரைக்காய் பிரடைகள் பிரடைப்பெட்டி யாளிமுகம்,

மேளச்சட்டம், மெழுகுச்சட்டம், இருபத்து நான்கு மெட்டுக்கள், குதிரைகள், நாகபாசம் என்பன வீணை-யின் பிரதான பாகங்களாகும். தண்டின் ஒரு பக்கத-தில் குடமும் மற்றொரு பக்கத்தில் யாளி முகம் இணைக்கப்பட்டு இருக்கும். தண்டியானது குட-முனைப் பக்கத்தில் சற்றுப் பருத்தும் யாழிமுகப் பக்கத்தில் சற்று சிறுத்தும் இருக்கும். யாழிமுகம் கீழ்நோக்கி இருக்கவேண்டும். தண்டியின் இரு பக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் உள்ளன. மெட்டு-கள் வெண்கலம், வெள்ளி, எஃகு ஏதாவது ஒன்றால் செய்யப்படும். யாழி முகத்திற்கு அருகில் இருக்கும் சுரக்காய் ஒரு தாங்கியாகவும் நாதத்தைப் பலப்படுத-துவதாகவும் உள்ளது. தந்திகள் நுனியில் உள்ள வளையங்களில் முடியப்பட்டு வளையுமெட்டு என்று சொல்லப்படும். குதிரையின் மேல் பிரடைகளிலே பிணையப்பட்டிருக்கும். சித்திரவேலை அல்லது கமலவேலைப்பாடு கூடியதாக வீணை இருக்கும். தஞ்சாவூர், திருவனந்தபுரம், மைசூர், விஜயநகரம், சென்னை, ராம்பூர், லக்னோ முதலிய இடங்களில் வீணை செய்யப்படுகின்றன. இன்று ஆலய பூஜை வழிபாட்டு முறைமையை விட மேடைகளிலும் வானொலி, தொலைக்காட்சி போன்ற நிகழ்வுகளிலும் வீணை முதன்மை பெற்று விளங்குகின்றது.

## தோற்கருவிகள்:

தோற்கருவிகள் பல வகைப்பட்டனவாக உள்ளன. மத்தளம், பேரிகை முதலாயின அகமுழவு எனப்-பட்டன. தண்ணுமை முதலாயின அகப்புற முழவு எனப்பட்டது. அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் பேரிகை படகம், இடக்கை, உடுக்கை என முப்பதிற்கு மேற்பட்ட தோற்கருவிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

**பறை:** பறையின் சீர்க்கு ஏற்ப இசை விழாக்களிலும் போரிலும் ஆடினர் என சங்க நூல்களில் குறிப்பிடப்-பட்டுள்ளன. திருவாசகத்தில் "நாதப்பெரும் பறை நவின்று களங்கவும்" எனவும் "நாதப்பறை அறைமின்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. இன்று கிராமிய வழிபாட்டு முறைமையில் பறை அடித்து பூஜை நடை-பெறுகிறது. ஆனாலும் யாழ்ப்பாணம் சாவகச்சேரி, பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் பறை அடித்துப் பூஜை நடைபெறுகிறது.

**துடி:** 'தோற்றம் துடியதனில்' என சைவசித்தாந்த தத்துவத்தில் முதன்மை பெறும் இசைக்கருவி துடியாகும். நடராஜ பெருமானின் திருக்கரத்தில் துடி ஒலிக்கிறது. இவ்வொலியில் பஞ்சகிருத்தியத்தில் ஒன்றான படைத்தல் நிகழ்கின்றது. துடியை உடுக்கு எனவும் அழைப்பர். தமிழ் இலக்கிய மரபில் உடுக்கு உவமையாக பயன்படுத்தப்படுகிறது. நாட்டுக் கூத்து பஜனை முதலானவற்றில் உடுக்கு இசைத்து பாடும் வழக்கம் நிலவுகின்றது.

## மிருதங்கம்:

சிவபெருமானின் நடனத்திற்கு நந்திகேஸ்வரர் மிருதங்கம் வாசித்தார் என புராணமரபு கூறுகிறது. தமிழ் இலக்கியத்தில் மத்தளம் என அழைக்கப்பட்-டது. இது பண்டைக்காலத்தில் மணலால் செய்யப்பட்டு மிருத் + அங்கம் = மிருதங்கம் (மிருத் = மண்) எனப் பெயர் பெற்றது. இன்றும் பிரதோஷ கால பூஜையில் மிருதங்கம் இசைக்கப்பட்டு வருகிறது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கொடியேற்றத்திலும் மிருதங்கம் இசைக்கப்படுகிறது.

மிருதங்கம் பலாமரம், கருங்காலி மரம், பனை மரம், வேப்பமரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினால் வசதிக்கேற்ப செய்யப்பட்டு வருகின்றது. இது தாளவாத்தியாமாகவும் தோல் வாத்தியமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

## பஞ்சமுகவாத்தியம்:

கோவில் கிரியை நெறியில் பயன்படுத்தப்பட்ட தாளவாத்தியமாக பஞ்சமுகவாத்தியம் உள்ளது. தஞ்சாவூரில் உள்ள திருவாரூர் கோவிலும் திருத்-துறைப் பூண்டியிலும் பஞ்சமுக வாத்தியம் பூஜையின் போது பயன்படுத்தப்படுகிறது. இது சுத்தமேளத்துடன் இணைத்துப் பயன்படுத்தப்படுகிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் பானை வடிவிலுள்ள "குடமுழா" என்னும் இசைக்கருவியின் திருந்திய வடிவமே பஞ்சமுகவாத்தியம் என்பர். இது ஐந்து முகங்க-ளைக் கொண்டது.இதன் நடு மேளம் இறைவனின் சத்தியோசாத முகம் என்றும், மற்றைய நான்கும்

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவமுகங்கள் என பெயரிடப்பட்டன. இக்கருவியின் பெரிய அமைப்பும் அதிக பாரமானதாக இருந்ததன் காரணமாக இது 4 சில்லுகளை உடைய ரதத்தில் அமைக்கப்பட்டது. ஆனால் இன்று பஞ்சமுகவாத்தியம் பெரு வழக்கில் இல்லை.

## தவில் (மேளம்):

நாதஸ்வரத்திற்கு பக்கவாத்திய தாளக் கருவியாக தவில் உள்ளது. பலா, கொண்டல் முதலிய மரங்களிலிருந்து வெட்டி உருளையைக் குடைந்து எடுத்து தவில் கொட்டுத் தயாரிக்கப்படுகிறது. இக்கொட்டின் இரண்டு பக்கமும் தோலால் மூடப்பட்டிருக்கும். வலந்தலையில் உட்கரைத் தட்டும் அதன் வெளியே வலந்தலைத் தட்டுமாக இரு தோல்கள் இணைக்கப்பட்டிருக்கும். இடந்தலையில் (தொப்பியில்) ஒரு தோல் இணைக்கப்பட்டிருக்கும். இத்தோல்களை நன்றாக இறுக்கமாக இணைப்பதற்கு எருமைத் தோல்வார் பயன்படுத்தப்படும். உருளைமேல் நடுவில் உள்ள பட்டைத் தோல்வார் மூலம் தவிலைச் சுற்றி இறுக வலிந்து கட்டுவதனால் தேவை யான இசையை எழுப்ப முடிகின்றது. மூங்கிலால் செய்யப்பட்ட ஒரு வளையங்களில் மெல்லிய தோல்வார்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும்.

தவிலின் வலப்பக்கத்தை வலது கைமணிக்கட்டு விரல்களினால் வாசிப்பர். இடது பக்கத்தை இடது கையிலுள்ள குச்சியால் (தடி) அடித்து வாசிப்பர். இது தவில் (கழி) என்பர். இது புரசை அல்லது திருவாச்சி மரத்தினால் செய்யப்படும். வாசிக்கும்போது வலது கைக்கு 7 துணிச் சுற்றுக்களைப் பயன்படுத்துவர். இவை சிறியதும் வலிமையானதுமான கூடுகள் ஆகும். வாத்தியத்தைப் பலமாக அடித்து தேவையான ஒலியை எழுப்ப வேண்டுமானால் விரல்களிலே கூடுகளை அணிந்து வாசிப்பர். சுட்டு விரலுக்கு ஒரு துணிச்சுற்றும் ஏனைய விரல்கள் ஒவ்வொன்றுக்கும் இரண்டு துணிச் சுற்றுக்களை பயன்படுத்துவர். இருந்தும் நின்றும் நடந்தும் வாசிக்கக் கூடிய இசைக்கருவியாகும். நால்வர் இணைந்த தவில் இசைக்குழுவை பெரியமேளம் எனவும் அழைப்பர். மங்கள நிகழ்வுகளில் ஏற்படுத்தப்படும் உரத்த தவில் இசை "கெட்டிமேளம்" என்பர்.

## துளைக்கருவிகள்:

புல்லாங்குழல் சங்கு, நாதசுரம், ஊதுகொம்பு முதலியன துளைக்கருவிகளாக உள்ளன. 'வேணு' எனச் சிறப்பிக்கப்பட்ட இசைக் கருவியான புல்லாங்குழல் குழந்தை கண்ணனால் இசைக்கப்பட்டது. இதனை பெரியாழ்வார் திருமொழியில் 'சிறுவிரல்கள் தடவிப் பரிமாற' என பாடியுள்ளார். பண்டைய இசைக்கருவியான புல்லாங்குழல் ஆலய வழிபாட்டை விட அதிகளவு மேடை நிகழ்வுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

"கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்" சங்கு, ஊது கொம்பு என்பன பழந்தமிழ் இலக்கியங்களிலும் இடம்பெற்றன. எழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும் என மாணிக்கவாசகரின் திருவெம்பாவையில் அதிகாலையில் சங்கு ஒலித்தமையை காட்டியுள்ளார். ஆலயங்களில் அன்றும் இன்றும் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளில் சங்கு முதன்மை பெற்றதாக உள்ளது. ஆலயத்தில் சங்காபிஷேகம் முதன்மை பெறுகிறது. வலம்புரிச் சங்கு சங்குகளில் முதன்மைப்படுத்தப்படுகிறது. அபிடேக உபகரணமாக சங்கு விளங்குகின்றது.

## நாதசுரம்:

இன்று எல்லா ஆலயங்களிலும் வாசிக்கப்படும் இசைக்கருவியாக நாதசுரம் உள்ளது. இதனை மங்கள வாத்தியம், பெரிய மேளம், நாயனம் என குறிப்பிடுவர். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பரதசங்கிரகம் என்னும் நூலில் நாதசுரம் பற்றிய குறிப்பு உள்ளது. ஆலயத்தின் வசதிக்கு ஏற்ப நாதசுர வித்துவான்கள் இராகங்களை வாசிக்கின்றனர். பூபாளம், வசந்தா, பிலஹரி, கேதாரம்,கல்யாணி இராகங்கள் இசைக்கப்படுகின்றன.

வருடாந்த மகோற்சவத்தில் சுவாமி வெளிவீதி வரும்போதும் வெளிவீதியில் இருந்து கோயிலினுள் செல்லும்போதும் மல்லாரி வாசிக்கப்படும். ஒன்பது திக்குகளிற்கும் (நவசந்தி) வர்ணம், இராகம், பல்லவி,

கீர்த்தனை பதம், இராகமாலிகை ஆகிய உருப்படிகள் இசைக்கப்படும். இது தொடர்பான குறிப்பு காமிக ஆகமத்தில் உள்ளது. இன்று நாதசுர வித்துவான்கள் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யமான உருப்படிகளை வாசிக்கின்றனர்.

## கஞ்சக்கருவிகள்:

உலோகத்தால் ஆக்கப்பட்ட இசைக்கருவிகளில் தாளம், மணி என்பன முதன்மையானவை. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் 35 தாள சிற்பம் உள்ளது. இது மீனாட்சி சுந்தரேஸ்வரி கோவிற் பிரகாரத்தில் நடராஜசந்நிதிக்கு முன் உள்ளது.

மணி ஓசை ஒலிக்காத ஆலயங்கள் இல்லை. ஆலயத்தில் கண்டாமணி, பஞ்சமணி, கொத்துமணி, ராகமணி எனப் பலவாறு மணிகள் பயன்பாட்டில் உள்ளன. அரச ஆட்சியில் அரண்மனையும் கோபுரமும் பெற்ற நிலைமை ஆலய அமைப்பில் இணைந்துள்ளன. இதனை மிக எளிமையாக விளக்குவது ராஜகோபுரத்து காண்டாமணியாகும். ஆலய பூசை ஆரம்பமாவதை கண்டாமணி ஒலிப்பதனூடாக சமூகத்துக்கு எடுத்துக் கூறப்படுகிறது. திருப்படையாட்சியில் மணிவாசக சுவாமிகள்

"நன்மணிநாதம் முழங்கியென் உள்ளூற
நண்ணுவ தாகாதே" என குறிப்பிட்டுள்ளார்.

சேமக்கலம் ஆலயத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. தாளம் ஆலயத்திலும் அரங்கத்திலும் பயன்படுத்தப்படுகின்றது.

## சர்வ வாத்தியம்:

மேற்கூறப்பட்ட இசைக்கருவி வகைகள் யாவும் ஒன்றாக இசைக்கப்படுதல் சர்வ வாத்தியம் எனப்படும். பழந்தமிழ் இலக்கியங்களில் இது ஆமந்திரிகை எனப்பட்டது. நச்சினார்க்கு இனியார் சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் பல்வேறு இசைக்கருவிகள் இசைக்கப்பட்டமையை விளக்கியுள்ளார்.

*குரல்வழி நின்ற தியாழே யாழ்வழித்*
*தண்ணுமை நின்றது தகவே தண்ணுமை*
*பின்வழி நின்றது முழவே முழுவொரு*
*கூடிநின் றிசைத்த தாமந்திரிகை*

இறைவன் கீதம் வாத்தியம், நிருத்தியம் என்ற மூன்று வகையாலும் வழிபடப்படுகின்றான். மேல் நாட்டார் சர்வ வாத்தியமும் ஒருங்கே இசைப்பதை (Orchestre) பல்லியம் என்பர்.

# திருவண்ணாமலை ஓர் அக்கினி ருத்ர வழிபாட்டுத் தலம்

முனைவர் ஆ.பத்மாவதி

வேதகால மக்கள் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்தபோது அங்கு அமைதியாக யோகம் செய்து கொண்டிருந்தவர்களும் இருந்தனர். இவர்கள் சடைமுடியை உடையவர்கள். மவுனம் கடைப்பிடித்ததால் முனி என வழங்கப்பட்டனர். வேதத்தை ஏற்றுக் கொள்ளாத இவர்கள் லிங்க வழிபாட்டு முறையைப் பின்பற்றியவர்கள். இவர்கள் சிஷ்ண தேவர்கள் என்றும் ருத்ரனின் புதல்வர்கள் என்றும் கூறப்பட்டனர். இவர்களையும் லிங்க வழிபாட்டையும் வேதவழிபாட்டினர் ஆதரிக்கவில்லை. எனவே இந்திரன் சிஷ்ண தேவர்கள் எனக் கூறப்படும் லிங்க வழிபாடு செய்பவர்களைக் கொன்று மிருகங்கட்கு இரையாக்கினான் எனக் கூறுகிறது ரிக்வேதம்.

சிந்து சமயவெளியில் கிடைத்த முத்திரைகளில் மூன்று முகத்துடனும் கொம்புத் தலையுடனும் கூடிய உருவம் யோக நிலையில் பத்மாசனத்துடன் காணப்படுகிறது. இவ்வுருவத்தின் அருகில் மாடுகள் நிற்கின்றன.

வேதங்களும் அதன் வழிவந்த நூல்களும் ஆகமங்களும் சிவனை திரிமுகன் என்றும் பசுபதி என்றும் யோகீஸ்வரன் என்றும் கூறுகின்றன. எனவே, வேதகாலத்தில் மட்டுமல்ல, சிந்துசமவெளி காலத்திலேயே சிவருத்திர வழிபாடு யோகத்துடன் கூடியதாகவே இருந்திருக்கிறது.

ரிக் வேதத்தில் சிஷ்ண தேவர்கள் எனக் கூறப்பட்ட முனிகள் அதர்வ வேதத்தில் விராத்தியர்கள் எனக் கூறப்பட்டனர். இந்த விராத்தியர்கள் யோகப் பயிற்சி உடையவர்கள் என்றும் துறவு முறையைப் பின்பற்றியவர்கள் என்றும் கூறப்படுகிறது. இந்த விராத்தியர்கள் வழிபடும் ருத்ரனை ரிக்வேதம் இழிவாகக் கூறுகிறது. யஜுர்வேதம் தைத்ரீய சம்ஹிதை நாலாவது காண்டம் ஐந்தாவது பிரபாகடமே ஸ்ரீருத்ரம் என்ற பெயருடன் பேசப்படுகிறது.

எனவே விராத்தியர்கள் ருத்ரனாகிய மகாதேவ வழிபாட்டையும் யோக நெறியையும் பின்பற்றியவர்கள். இந்த யோக நெறிகளைத் தொகுத்து எழுதியவர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர் ஆவார். இவர் யோகம் பற்றி தொகுத்துத் திரட்டி எழுதிய நூலுக்கு யோக சூத்ரம் என்று பெயர். பதஞ்சலி எழுதிய யோக சூத்ரம் மிகப் பழைய தத்துவமான சாங்கியத்தில் இருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டது.

"பழைய சாங்கியம், சடப்பொருளாகிய பிரகிருதி இயக்கத்தில் உள்ளது என்றும் அதில் சமத்துவம் ராஜசம், தாமஸம் ஆகிய குணங்கள் சமமாக இருந்தன என்றும், அதன் இயக்கங்களில் மாறுபாடடைந்து ஒன்றின் குணம் அதிகரிக்கும் போது உலகில் உயிர்கள் தோன்றின என்றும் கூறுகிறது. பிரகிருதியை இயக்க வைக்க ஒரு புருடன் தேவை என்பதையோ, ஆன்மாவையோ இந்த பழைய சாங்கியம் ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் நிரீஸ்வர சாங்கியம் எனக் கூறப்பட்டது. ஆனால் பதஞ்சலி சாங்கியத்தில் புருஷன் என்ற கருத்து நுழைந்த பின் சேசீஸ்வர சாங்கியம் எனப்பட்டது. அதாவது கடவுள், யோகம் இவற்றுடன் கூடிய சாங்கியம் என்று பொருள்.

இவ்வாறு கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு சாங்கியத் தத்துவத்தில் புருடனாகிய கடவுள் புகுத்தப்பட்டார். பிரக்ருதியின் முக்குணங்களில் இருந்து தோன்றும் பொருள்களுள் சத்துவம் மேலோங்கும் போது உற்பத்தி உண்டாகிறது. தாமசகுணம் மேலோங்கி நிற்கும்போது தன் மாத்திரைகள் ஐந்தும் தோன்றுகின்றன. அந்த ஐந்திலிருந்து பஞ்சபூதங்களுக்குக் காரணமான மூலப்பொருட்களை (ஆகாசம், காற்று, தீ, நீர், நிலம்) தோன்றுகின்றன என்று கூறுகிறது சாங்கியம்.

இந்த ஐந்து பூதங்களுக்கும் ஐந்து தலங்கள் உள்ளன. இத்தலங்களில் சிவலிங்கமானது தீயாகவும், நீராகவும் ஆகாயமாகவும் நிலமாகவும், வாயுவாகவும் வணங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு

நெருப்பு வடிவில் வழிபடப்படும் இறைவன்தான் திருவண்ணாமலைக் கோயிலில் உள்ள அண்ணாமலையார் என்ற இறைவனாகும்.

அண்ணாமலையார் என்ற பெயர் லிங்கோத்பவ மூர்த்திக்குத்தான் வழங்கப்படுகிறது. லிங்கத்திலிருந்து இறைவன் தோன்றுவதாக அமைந்திருக்கும் இச்சிற்பம், அதாவது ஒளி வடிவத்தூணாக ஆதியும் அந்தமுமில்லாமல் இருப்பவன் சிவன். இவனது முடியைத் தேடி பிரம்மா அன்ன வடிவெடுத்தும் அடியைத் தேடி விஷ்ணு பன்றி உருவமெடுத்தும் தேடிய போது காணமுடியாது திரும்பினர் எனக் கூறுகிறது லிங்கபுராணம். லிங்க புராணத்தின், அக்கதையைப் படித்த அப்பா, 'லிங்கபுராணச் சருக்கம்' எழுதினார்.

அச்சருக்கத்தைப் படித்த முதலாம் இராஜராஜசோழன் தான் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் லிங்க புராண தேவரை செப்புச் சிலையாக வடித்து மகிந்தான் என்பதையும் இங்கு நினைவு கூரலாம்.

ஆக, சிவபெருமான் ஒளியாகிய தீவடிவினன் என்றால் அந்தத் தீவடிவம் வானையும் பூமியையும் இணைக்கும் பாலம் போலவும் அதனையும் மீறி இருந்தது என்றும் பொருள்.

வேதங்களும் விதாதாவிலிருந்து (யாகம் செய்யும் சபை) அக்னி அவியை தேவர்களுக்காக எடுக்கிறான் என்றும், அவன்தான் விதாதாவுக்கும் தேவர்களுக்கும் இணைப்பாளனாக செயல்படுகிறான் என்றும் கூறுகின்றன. யாகம் செய்யும்போது, அந்த யாகத் தீயாகிய அக்னியையே அவர்கள் அவ்வாறு வர்ணித்தனர்.

ருத்ரன் யாகத்தை அழிப்பவன் என்றும் ருத்ரனின் கோபத்தைத் தணிக்க யாகத்தின் போது சிந்துகிற அவியை அவனுக்குக் கொடுத்ததாகவும் கூறுகின்றன வேதங்கள்.

ஆனால் இலிங்கபுராணமோ ஒளிப்பிழம்பாகிய அக்னியிலிருந்து தோன்றியவன் ருத்ரன் என்கிறது. அதனால் அக்னி - ருத்ரன் என்றும் அவனுக்குப் பெயர். லிங்கபுராணம் கி.பி. 2ம் நூற்றாண்டில் சிவலிங்க வழிபாட்டைப் புதுப்பித்த லகுளீசர் பற்றியும் அவரது சித்தாந்தம் பற்றியும் விவரித்துக் கூறுகிறது. லகுளீச பாசுபதர்கள் கடைப்பிடிக்கின்ற யோக வாழ்வையும் அட்டாங்க யோகம் பற்றியும் கூறுகிறது.

பதஞ்சலியின் யோக சூத்திரமும் அஷ்டாங்க யோகம் பற்றிக் கூறுகிறது. கி.பி. பதினோராம் நூற்றாண்டில் லகுளீச சித்தாந்தத்தைப் பின்பற்றும் காளாமுகக் குருக்களால் அஷ்டாங்க யோகம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. ரகுளீச சித்தாந்தத்தை உருவாக்கிய லகுளீசர், பழைய சாங்கியத்தில் உள்ள பஞ்ச பூதங்கள் கி.பி. 5ம் நூற்றாண்டில் சாங்கியத்தில் நுழைந்த யோகம், வேதகாலங்களில் சிஷ்ண தேவர்களாலும், விராத்தியர்களாலும் வழிபடப்பட்ட ருத்ரன், அவனது குணாதிசயங்கள், வேதங்கள் தவிர்க்க இயலாதவாறு ருத்ரனைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் ஆகியவை, லகுளீசரின் சித்தாந்தத்தில் உள்ளன என்பது உண்மை.

லகுளீசரின் மாணவர்கள், பாசுபதர்கள் என்றும் காளாமுகர்கள் என்றும் கபாலிகர்கள் என்றும் தனித்தனியே சைவத்தை வளர்த்து வந்தனர். இவர்களில் பாசுபதர்களும் காளாமுகர்களும் பின்பற்றிய சித்தாந்தம், தங்கள் குரு லகுளீசரால் ஏற்படுத்தப்பட்ட லகுளீச சித்தாந்தமே ஆகும். இத்தகைய சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்த பஞ்சபூத தலங்களில் ஒன்றுதான் திருவண்ணாமலை. இந்த பின்னணியுடன் இங்கு திருவண்ணாமலைக் கோயில் வரலாற்றைக் காண்போம்.

இக்கோயில் நிர்வாகத்தையும் வழிபாட்டு முறைகளையும் கவனித்து வந்த சிவபக்தர்கள் ஸ்ரீருத்ர மாஹேஸ்வரர்கள் எனப்பட்டனர். பொதுவாக இவ்வாறு பணிபுரிந்து வரும் சிவனடியார்களை ஸ்ரீமகேஸ்வரர்கள் என்ற பெயரால் குறிப்பதுண்டு. ஆனால் திருவண்ணாமலை போன்ற சில கோயில்களில் சிவனின் குறிப்பிட்ட ஒரு அம்சம் சிறப்பாக வழிபடப்படுமேயாயின் அந்த பெயரில் இறைவனை வழிபடுவதுடன் வழிபாடு செய்யும் சிவனடியார்களும் அந்தச் சிறப்புக்குரிய பெயருடன் அழைக்கப்படுவதுண்டு.

அத்தகைய ஒரு கோயில்தான் திருவண்ணாமலையும் அங்கு பணிபுரிந்த சிவனடியார்களும். திருக்கழுக்குன்றத்தில் பணிபுரிந்த சிவனடியார்களும் ஸ்ரீ ருத்ர ஸ்ரீமகேஸ்வரர்கள் என குறிக்கப்பட்டனர்.

சேலம் மாவட்டம் ஆறகளூரில் ஸ்ரீருத்ரர்கள் என்றும் ஸ்ரீமகேஸ்வரர்கள் என்றும் குறிக்கப்பட்டனர்.

தஞ்சை மாவட்டம் திருமயானம் என்ற ஊரில் வேதமும் ஸ்ரீருத்ரமும் இறைவன் முன் வாசிக்கப்பட்டன. நெல்லூர் மாவட்டம் நந்தனவனத்தில் மல்லிகார்ஜுனர் கோயிலில் ருத்ராபிஷேகம் செய்யப்பட்டது. திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் ஸ்ரீருத்ரம் அத்யயனம் செய்யப்பட்டது.

இக்கோயில்களில் எல்லாம் சத்ருத்ரீய பிரமாணத்தில் உள்ள ஸ்ரீருத்ரம் இறைவன் முன் ஓதப்பட்டு வழிபடப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம். திருவண்ணாமலை ஒரு அக்னித்தலம் ஆதலால் இறைவன் ஒளிவடிவமான தூணாக வானையும் மீறிய ‘உயரத்திலும், பூமியையும் மீறி பாதாளத்திலும் விளங்குபவன். ஆதலால் அந்த இறைவனுக்கு கார்த்திகைத் தீபத் திருவிழா சிறப்புக்குரியதாக விளங்குகிறது.

இக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களை ஊன்றிக் கவனித்தால் கார்த்திகை மாதத்தில் மட்டுமல்ல, தினம் தினம் தீபத்திருவிழா போன்று எங்கும் ஒரே தீபமயமாகவே காட்சியளித்திருக்க வேண்டும் போலத் தெரிகிறது.

சோழமன்னர்கள், ராஜசேகரி வர்மனாகிய முதலாம் ஆதித்த சோழன், முதலாம் பராந்தக சோழன் ஆகியோர் காலம் முதல், பிற்காலம் வரை கல்வெட்டுகள் உள்ளன. மன்னர்களும் சரி, அரசியரும் சரி அரசியல் அதிகாரிகள், சிற்றரசர்கள், ஏன் சேர நாட்டிலிருந்து இங்கு வந்து தானமளித்த சேரநாட்டு அரசியாக இருந்தாலும் சரி அவர்களெல்லாம் இக்கோயிலுக்குத் தானமளித்தது தீபமேற்ற ரூந்தா விளக்குகளைத்தான்.

இவர்களெல்லாம் பொன்னையும் பொருளையும் நிலங்களையும் ஏராளமாகத் தானம் செய்திருக்க முடியும். ஆனாலும் தீபமேற்றி விளக்குகள் எரிக்க, ஆடுமாடுகள் கொடுப்பதையே சிறப்பாகக் கருதினர். பிறதானங்களும் கொடுக்கப்பட்டன என்றாலும் இக்கோயிலுக்கு தீபமேற்றும் தானத்தையே புண்ணியமாகக் கருதியிருக்க வேண்டும். அதனால் அக்கோயில் தினம் தினம் ஒரே தீபமயமாகக் காட்சியளித்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. அக்னி வடிவான இறைவன் அக்னி வடிவாகத் தீபங்களில் ஜொலித்துக் கொண்டிருப்பதாக நம்பியிருத்தல் வேண்டும்.

ஆனால் கார்த்திகைத் திருநாள் பற்றி முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கி.பி. 1031இலே தான் குறிக்கப்பட்டுள்ளது என்றாலும் சாதாரண நாட்களிலேயே ஒளிமயமாக விளங்கிய கோயில் கார்த்திகைத் திருநாளன்று எப்படி இருந்திருக்குமென்று கூறவேண்டியதே இல்லை.

ராஜேந்திர சோழனின் இரு கல்வெட்டுக்கள் சில சுவையான செய்திகளைக் கூறுகின்றன. அதாவது கார்த்திகைத் திருநாளின் போது இறைவன் வேட்டைக்குச் செல்லும் நிகழ்ச்சி நடந்தது. அன்று அக்கோயிலிற் சாதாரண நாட்களில் திருவமுது படைப்பது போலல்லாமல் பெருந்திருவமுது செய்து திருவிழாவுக்கு வருகைதரும் அடியார்களுக்கு சட்டிச் சோறு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதுமட்டுமல்ல, அண்ணாமலையார் கோயில் விமானத்தைச் சுற்றிலும் இரவு சந்தி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இந்த விளக்குகளுக்கு அணுக்க விளக்காக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது என்பன போன்ற செய்திகளால் கார்த்திகைத் தீபத்தன்று அக்கோயில் எத்தகைய தீப அலங்காரங்களுடன் அழகாக காட்சியளித்திருக்கும் என்பதை நம் மனத்திரையில் கொண்டு வரமுடிகிறது.

இவ்வாறு விளக்குகள் ஏராளமான ஆடுமாடுகள் கொடுக்கப்பட்டன என்பதைநாம் முன்னர் கண்டிருக்கின்றோம். இவற்றைப் பராமரிக்கும் மன்றாடிகளை இவ்வூர்க் கல்வெட்டுகள் சிவனடியார்களைக் குறிப்பிடுவது போல ‘சுரவித்திருமேனிகள்’ என மிக்க மரியாதையுடன் குறிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் திருக்கார்த்திகை விழாவில் ஆடவல்லவராகிய நடராஜருக்கு சாந்தாடல் செய்ய 80 கழஞ்சு பொன் கொடுக்கப்பட்டது. பஞ்சபூதங்களுள் ஒன்று ஆகாயம். ஆகாயமாக உருவகப்படுத்தப்பட்டவர் நடராசர். அதனால் கார்த்திகைத் திருநாளில் அவருக்கும் சிறப்புச் செய்யப்பட்டிருக்கலாம்.

கார்த்திகைத் திருவிழா பற்றிக் கூறும் அடுத்த கல்வெட்டு மூன்றாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு 32ஆவது திருக்கார்த்திகைத் திருநாள் முதல் திருவீதி ஆண்டார்களாக 20 பேரை நியமித்தது பற்றிக் கூறுகிறது. அது என்ன 32ஆவது திருக்கார்த்திகை என்று பார்த்தால், இக்கல்வெட்டு அம்மன்னனின் 32ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். அப்படியென்றால் குலோத்துங்க சோழன் ஒவ்வொரு திருக்கார்த்திகைத் திருவிழாவையும் தான் ஆட்சிக்கு வந்தது முதல் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறான் என்பது பொருள்.

ஆக, அக்னியாகிய ருத்ரனுக்கு அக்னியாலேயே திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

வேதங்கள் ருத்ரனின் கோபத்தைத் தணிக்க ஆட்டின் பாலால் அபிஷேகம் செய்ததைக் கூறுகின்றன. திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டுகளும் இறைவன் பாலாடி அருள ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததைத் தெரிவிக்கின்றன. இறைவன் பாலாடியருள பசுக்கள் கொடுத்த செய்திகள் மட்டுமல்ல, நெய்யபிஷேகத்திற்கும் பசுக்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

உத்திரமயன சங்கிராமம், தட்சிணமயன சங்கிரம் எனக் கூறப்படுகின்ற ஐப்பசி மாதப்பிறப்பு அன்றும் சித்திரை மாதப்பிறப்பு அன்றும் ஆயிரம் குடங்கள் அல்லது சங்குகள் கொண்டு பால், நெய் போன்றவற்றால் அபிஷேகம் செய்யப்பட்ட செய்தி காணப்படுகிறது. இந்த அபிஷேகங்கள், ருத்ராபிஷேகம் என வழங்கப்பட்டதை நெல்லூர் மாவட்ட நந்தனவன மல்லிகார்ஜுனர்கோயில் கல்வெட்டு மூலம் அறிந்தோம்.

வேதங்கள், ருத்ரனை மலையடிவாரத்தில் உறைபவன் என்றும் நீர்நிலைகளாகிய ஏரி, ஆற்றங்கரைகளில் உறைபவன் என்றும் கூறுகின்றன. திருவண்ணாமலை இறைவனோ, மலையடிவாரத்தில்தான் உறைந்திருக்கிறான் அருகில் ஏரியும் உள்ளது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்லவர் குல குறுநில மன்னனாக புகழ்பெற்று விளங்கியவன் கோப்பெருஞ்சிங்கன் என்ற மன்னன். இவன் சிறந்த சிவபக்தன். சிறந்த பணிகளை சிவன் கோயிலுக்குச் செய்தவன். இவன் காலத்துப் பாடல் கல்வெட்டு ஒன்று திருவண்ணாமலையில் உள்ளது.

இக்கல்வெட்டு சிவனை ஆதிநாதன் என்றும், பாய் புனற் கங்கையைச் சடையிலே ஏற்றுக் கொண்டவன், பிறைசூடியவன் என்றும் கூறி இந்தச் சிவனை, ஆதியில் ஐந்தெழுத்தோதி வணங்கிய தொண்டர்கள் நாற்பத்தெண்ணாயிரவர் எனக் கூறியதுடன் அதே பெயரில் அங்கு சிவனடியார்கள் வாழ்ந்தது பற்றியும் கூறுகிறது.

இக்கல்வெட்டில் கூறுகிற "ஆதியில் ஐந்தெழுத்தோதி வணங்கிய தொண்டர்கள்" என்பது முக்கியமான ஒன்றாகும். யஜுர் வேத தைத்ரீய சம்ஹிதையில் பஞ்சாட்சரம் எனக் கூறப்படுகிறது. பஞ்சாட்சரம் என்றால் ஐந்து எழுத்துக்கள் என்று பொருள். அதாவது 'நமசிவாய, சிவதராய சஹ' என்ற பகுதி வருவதும் குறிப்பிடத்தக்கது. இதே சமஹிதைதான் ஸ்ரீ ருத்ரம் என்று வழங்கப்படுகிறது என்பதை முன்னர் கண்டோம்.

திருவண்ணாமலையில் இறைவன் ருத்ரன் என்பதையும் ஸ்ரீருத்ரம் என்னும் மந்திரத்தையும் சிறப்பாகவே உணர்ந்து வழிபடப்பட்டு வந்தது. இன்றும் வழிபடப்பட்டு வருகிறது என்பது தெரிய வருகிறது.

ஆக, இக்கோயில் பசுபத, காளாமுக, சைவர்கள் பின்பற்றிய லகுளீச சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்த அக்னி - ருத்ர வழிபாட்டுத்தலம் என்பது நன்கு புலனாகிறது.

# கார்த்திகைத் தீபத்திருவிழா

## கல்வெட்டு - சமயம் - சிற்பம் - தரும் விளக்கங்கள்

கார்த்திகைத் தீபம் என்றாலே திருவண்ணாமலைத் தீபம் தான் நம் நினைவிற்கு வரும். திருவண்ணாமலையில் அத்தனை சிறப்புடன் கார்த்திகைத் தீபம் கொண்டாடப்படுவதற்குக் காரணம் இருத்தல் வேண்டும். கல்வெட்டுக்கள் தரும் ஆதாரத்தின்படி அக்கோயிலில் கி.பி. பதினோராம் நூற்றாண்டு முதலே இத்திருவிழா சீருடனும் சிறப்புடனும் நடைபெற்று வந்திருக்கிறது. அக்கோயிலின் சமய வரலாற்றுத் தத்துவ விளக்கப் பின்னணிதான் என்ன?

பஞ்சபூதங்களினால் ஆனதே இவ்வுலகம். பஞ்சபூதங்களுமாய் இருப்பவன் சிவன். அவனே நீர், அவனே நிலம், அவனே வாயு, அவனே தீ, அவனே ஆகாசம். ஆகாசமாய் தில்லையிலும், தீயாகத் திருவண்ணாமலையிலும் வாயுவாகக் காளஹஸ்தியிலும், நிலமாகக் காஞ்சியிலும், நீராகத் திருவானைக்காவிலும் லிங்க வடிவில் கோயில் கொண்டிருப்பவன் அவன்.

திருவண்ணாமலை அக்னித்தலம் என்பதால் தீபவடிவில் அக்னி வணங்கப்படுகிறதா?

**அண்ணாமலையார் சிற்பம்:** சிவனின் அம்சங்களுள் ஒன்றான லிங்கோத்பவர் என்பது லிங்கத்தின் அழகிய கதை முதன் முதலில் லிங்கபுராணத்தில் கூறப்பட்டுள்ளதால் லிங்கபுராணத்தேவர் என்று அழைக்கப்பட்டார். ஆக அக்னி லிங்கம்தான் லிங்கபுராண தேவராயிற்று. இதே லிங்கபுராண தேவராகிய அக்னி லிங்கம் தான் அக்னித்தலமாகிய திருவண்ணாமலையில் வழிபடப்படுவதால் அண்ணாமலையார் ஆயிற்று. ஆகவே, அண்ணாமலையார் லிங்கபுராண தேவராகிய லிங்கோத்பவரே என்பது தெளிவாகிறது.

**தேவாரங்களில் புராணக்கருத்துக்கள்:**

அக்னிலிங்கத்தின் அடிமுடிதேடிய கதையைப் பற்றி அப்பர் ஒரு பொதுப்பாயிரத்தில் பாடியுள்ளார். அப்பாயிரத்தை லிங்கபுராணக் குறுந்தொகை என்று கூறியிருப்பதைக் கொண்டு அப்பர் லிங்கபுராணத்தைப் பின்பற்றி பாடியிருப்பதை அறிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்ல அவரது பாடல்களிலும் சரி, ஞானசம்பந்தர் பாடல்களிலும் சரி கடவுள்களின் உருவ அமைதிகள், வழிபாட்டு முறைகள், பஞ்சபூதங்களாகக் கூறப்படும் சிவனின் ஐந்து முகங்கள் ஆகியவை பற்றியும், தக்கன் யாகத்தை அழித்தது, காமனை எரித்து, காலனை உதைத்தது, யானையைக் கிழித்தது, பிரமன் தலையைக் கொய்தது. முப்புரங்களை அம்பால் அழித்ததுபோன்ற செய்திகளும் பரவலாகக் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. சைவ ஆகமங்களாக இக்கருத்துக்கள் லிங்க-அக்னி-சிவபுராணங்களில் மிகவும் சிறப்புடன் பேசப்பட்டிருக்கின்றன. கி.பி.நான்காம் நூற்றாண்டிலே தொகுக்கப்பட்ட இப்புராணங்களை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த தேவார ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருந்தனர். தாங்கள் ஒப்புக்கொண்ட அப்புராணக் கருத்துக்களையும் தத்துவங்களையும் தங்கள் பாடல்களில் புகுத்தி மக்கள் மத்தியில் பக்திப் பரவசத்தைப் பெருக்கி புதியதொரு சமயநெறியைக் கூட்டி, சைவசமய மறுமலர்ச்சியை வகுத்திருக்கின்றனர்.

இப்புராணங்களைக் கூறும் பாசுபத சைவசமயத்தின் அடிப்படையில் எழுந்த தேவாரப் பாடல்கள் கூறும் சைவ சமயத் தத்துவமே சோழர்கள் உருவாக்கிய பேரரசிற்கு முதுகெலும்பாய் விளங்கியது என்பதை வரலாற்று, சமய, தத்துவ கோயிற்கலைகள் ஆய்வினின்றும் அறிந்து கொள்ளலாம்.

**புராணங்களில் கார்த்திகைத் தீபம்:**

கார்த்திகை மாதத்தில் விளக்குகள் ஏற்றி வழிபாடு செய்யப்படுவதற்கும் லிங்க, அக்னி புராணங்களில் சான்றுகள் உள்ளன.

இறைவனை வழிபடும் முறைபற்றி லிங்கபுராணம் கூறும்போது யார் கார்த்திகை மாதத்தில் இறைவன் முன்னிலையில் நெய் வழங்குகின்றார்களோ, அவர்-

கள் நற்பயனை அடைவார்கள் என்று கூறுகிறது.

விளக்குத்தானம் செய்வதனால் எல்லாவிதமான மகிழ்ச்சியும் விமோசனமும் கிடைக்கும் என்று கூறும் அக்னிபுராணம், கார்த்திகை மாதத்தில் விளக்குதானம் செய்பவர்கள் சொர்க்கத்தை அடைவார்கள். விளக்கு தானம் செய்வதைவிட வேறு சிறந்த தானம் இல்லை. இத்தானம் செய்வதினால் நல்ல கண்பார்வையும் ஒளிமயமான எதிர்காலமும் வம்ச விருத்தியும் ஏற்படும் என்றெல்லாம் கூறுகிறது.

இக்கருத்துக்களின் தாக்கம் எந்த அளவு தமிழகத்தில் வேரூன்றியிருந்தது என்பதை ஏராளமான தானங்கள் கோயில்களுக்கு விளக்கெரிக்க அளிக்கப்பட்டிருந்ததைக் கொண்டு அறிந்துகொள்ளலாம்.

திருவண்ணாமலைக் கோயிலில் திருக்கார்த்திகைத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் ஏராளமாக உள்ளன. இவ்விழாவுக்கு வருகைதரும் சிவனடியார்களுக்கு உணவு வழங்கவும் அவ்வூரிலுள்ள மடங்களுக்கு நிலங்கள் தாளமளிக்கப்பட்டிருந்தன.

முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கி.பி. 1031இல் திருக்கார்த்திகைத் திருநாளன்று திருவண்ணாமலைக் கோயில் ஸ்ரீவிமானத்தைச் சூழ இரவை சந்தி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. (கருவறை முதல் மேலே உள்ள சிகரம் வரை உள்ள கட்டடப் பகுதியே ஸ்ரீவிமானம் என்று கூறப்படும்) இவ்வாறு உயர்ந்த விமானத்தில் சூழ எரிந்த சந்தி விளக்குகளின் தீபங்களே அக்னி லிங்கமாக காட்சியளித்திருக்கும். இந்த சந்தி விளக்குகளுக்கு அணுக்க விளக்காக ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதே மன்னன் காலத்தில் எட்டு வருடங்களுக்குப் பின்னர் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டிலும் கார்த்திகைத் திருவிழா பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த இரு கல்வெட்டுக்களுமே சிவனடியார்களுக்கு உணவு வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த செய்தியையும் தெரிவிக்கின்றன.


இம்மன்னன் மகன் முதலாம் இராஜாதிராஜன் காலத்திலும் கார்த்திகைத் திருவிழாவன்று நடராஜருக்கு சாந்தாடல் செய்வதற்கு (சந்தன அபிஷேகம்) நிவந்தஞ் செய்யப்பட்டிருந்தது.

முதலாம் குலோதுங்க சோழன் தொடர்ந்து கார்த்திகைத் திருவிழாவினை நடத்தி வந்தான் என்று தெரிகிறது. அவனது முப்பத்தியிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, முப்பத்தியிரண்டாவது திருக்கார்த்திகைத் திருநாள் எனக் குறிப்பிடப்படுவது கொண்டு அறிந்து கொள்ளலாம்.


சோழ மன்னர்கள் அனைவருமே திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபத்திருவிழாவை வருடந்தோறும் சிறப்புடன் நடத்தி வந்தனர் என்பது புலனாகிறது.

இவ்வாறு கல்வெட்டுக்கள், லிங்கோத்பவர் சிற்பம், லிங்கபுராணமும் தேவாரப்பாடல்களும் தாங்கி நிற்கும் பாசுபதச் சித்தாந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வு செய்தோமேயானால் பஞ்சபூதங்களுள் ஒன்றுதான் கார்த்திகைத் தீபத் திருவிழா என்பது மிக நன்றாகத் தெளிவாகும்.

லிங்கபுராணத்தில் கூறப்பட்ட அக்னிலிங்கத் தத்துவத்தில் அமைக்கப்பட்ட லிங்கோத்பவர், லிங்கபுராணத்தேவர், அண்ணாமலையார் என்றெல்லாம் கூறப்படும் அச்சிற்பம் பெரும்பாலான சிவன் கோயில்களில் கருவறையின் மேற்குப் புறத்தேவ கோட்டங்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் கண்டுகளிக்கலாம்.



# குத்துவிளக்கின் விளக்கம்



அன்பு (Love), நிதானம் (Moderation), சமயோகிதம் (Tact), மன உறுதி (Determination), சகிப்புத்தன்மை (Tolarence) இவை குடும்பப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய 5 குணங்களாகும். இவ் ஐந்து குணங்களும் சேர்ந்து பிரகாசிக்க வேண்டும் என்பது தத்துவம்.

பூஜை அறையில் குத்து விளக்கை ஏற்றும்போது அவ்வறையே தெய்வீக நிழலோடு மிளிர்வதை நாம் அனுபவத்தில் பார்த்துவருகிறோம். அந்தக் குத்துவிளக்கின் அமைப்பே ஒரு தனித் தன்மையுடையது.

### அடிப்பாகம்

மலர்ந்த தாமரைப் பூப்போல் அகன்று வட்டமாக இருப்பதால் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரம்மதேவின்யக் குறிக்கின்றது.

### தண்டுப்பாகம்

இது தூணைப் போன்று உயரமாக இருப்பதால் ஓங்கி வளர்ந்து பூமியை ஓரடியாலும் ஆகாயத்தை ஓரடியாலும் அளந்த நெடுங்காலமாகிய மஹாவிஷ்ணுவைக் குறிக்கின்றது.

### அகல் விளக்கு

தண்டுக்கு மேலே அகல்போல் நெய் அல்லது எண்ணெய் ஊற்றப்பட்டுள்ள பாகம், சிவனார் கங்கையைச் சடையுள் வைத்திருப்பது போல் இருப்பதால் இப்பாகம் உருத்திரனைக் குறிக்கின்றது.

### திரியிடும் கண்

திரி எரிவதற்குரிய 5 முகங்களும் மஹேஸ்வரனை (பஞ்சமுகன்) குறிக்கின்றது. (ஈசானம், வாமதேவம், சத்யோதயம், தத்புருஷம், அகோரம் என்பதேயாகும்)

### மேல்தண்டு

அகலின் மேல் கும்ப கலசம் போல் உள்ள உச்சிப் பாகம் இருப்பதால் ரூபா ரூபத்திருமேனி உடைய சதாசிவனாய் பாவிக்கத்தக்கது.

### எண்ணெய்

அகல் பாகம் முழுவதும் பரவியுள்ள நெய்யானது உருவமின்றி எங்கும் பரவி நிற்கும் நாத தத்துவத்தைக் குறிக்கின்றது. திரி இந்து தத்துவத்தை அல்லது வெண்மை நிற ஒளியை விளக்குகின்றது. (பிந்து)

சுடர் தீப்பிழம்பு இலக்குமி தேவியின் சொரூபமாகக் கருதப்படுகிறது. (திருமகள்) ஒளி பிரகாசமாய் இருப்பதால் இது ஞானமயமான சரஸ்வதி தேவியின் சொரூபத்தைக் குறிக்கின்றது.

சூடு எரிக்கும் சக்தியானது அழிக்கும் சக்தியாகிய உருத்திராணியின் சொரூபமாக கருதப்படுகின்றது. விளக்கில் அழகாக அமைந்திருக்கும் வேலைப்பாடுகள் எல்லாம் கணபதி, முருகன், இராமர், கிருஷ்ணன் போன்றோரைக் குறிக்கும்.

பூஜைகள் எல்லாம் பூர்த்தியானதும் விளக்கைப் பட்டென்று அணைக்கக்கூடாது. வாயால் ஊதியும் அணைக்கக் கூடாது. மெல்லத்திரியை பின்னுக்கு இழுத்து அது எண்ணெய்க்குள் அமிழ்ந்து விடுமாறு செய்யவேண்டும். அல்லது ஒரு மலரால் கைமர்த்த வேண்டும். நெய், இலுப்பை, வேப்பெண்ணெய் இவை மூன்றும் கலந்து தீபமிடுவதால் செல்வம் உண்டாகும். குலதெய்வத்திற்கு உகந்தது.

நெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய இவை ஐந்தும் கலந்து தீபமேற்றினால் தேவியின் அருளும் மந்திர சக்தியும் உண்டாகும்.

## தீபத்திற்குரிய எண்ணெய்களும் அதன் பயன்களும்

| | | |
|---|---|---|
| தேங்காய் எண்ணெய் | - | கணபதிக்கு உகந்தது. மனஉறுதி கிடைக்கும் |
| நல்லெண்ணெய் | - | விஷ்ணுவுக்கு உகந்தது. பீடைகள் விலகும். |
| | - | உடல்நலம், மனவலிமை சேரும். நவக்கிரகப்பீரிதி உண்டாகும் |
| நெய் | - | மகாலட்சுமிக்கு உகந்தது. சகல சுகமும் செல்வமும் சேரும். லட்சுமி |
| | - | கடாட்சம் உண்டாகும். கிரகதோஷம் விலகும் |
| விளக்கெண்ணெய் | - | குலதெய்வம் கடாட்சம், புகழ் சிறந்த |
| (ஆமணக்கு) | - | வாழ்க்கை, உறவினரால் நன்மை கிட்டும் |
| இலுப்பெண்ணெய் | - | அம்மன் அல்லது காளிதேவியின் உதவி கிட்டும் |
| வேப்பெண்ணெய் | - | ருத்ர தேவதைகளின் அருள் கிட்டும் |
| கடலை எண்ணெய் | - | உபயோகிக்கக்கூடாது. |

(வேப்பெண்ணெய்க்குப் பதில் நல்லெண்ணெய் பாவிக்கலாம்) சர்வ மங்கள யோகம் உண்டாகும்.

| | |
|---|---|
| வெங்கல விளக்கில் | - தீபமேற்றினால் பாவங்கள் போகும் |
| இரும்பு விளக்கில் | - தீபமேற்றினால் நட்புறவு ஏற்படும் |

சனிக்கிழமைகளில் இரும்பு விளக்கில் தீபமேற்றினால் சனிப்பிரீதி உண்டாகும்.

## தீபம் ஏற்றும் திசைகளும் பயன்களும்

| | |
|---|---|
| கிழக்கு | - துன்பங்கள் யாவும் விலகும், கிரகபீடை அகலும். |
| மேற்கு | - கடன் தொல்லை, கிரகதோஷம், சனிப்பீடை அகலும், விரோதங்களைப் போக்கும். |
| வடக்கு | - திரண்ட செல்வமும், மங்களமும் உண்டாகும். திருமணத்தடை நீங்கும். அறிவு வளர்ச்சி, - சுபகாரியங்கள் நடக்கும். |
| தெற்கு | - தீபம் ஏற்றக்கூடாது. |

மேல்நோக்கி நெடிதா எரியும் சுவாலை - ஆரோக்கியத்தையும் சுகபோகங்களையும் தரும்.

## தீப முகங்கள்

| | |
|---|---|
| ஒருமுகம் ஏற்றினால் | - மத்திமபலன் |
| இருமுகம் ஏற்றினால் | - குடும்ப ஒற்றுமை பெருகும் |
| 3 முகம் ஏற்றினால் | - புத்திர சுகம் தரும் |
| 4 முகம் ஏற்றினால் | - பசு, பூமி இவற்றைத் தரும் |
| 5 முகம் ஏற்றினால் | - செல்வத்தைப் பெருக்கும் |

விளக்கை நன்றாகச் சுத்தம் செய்து, மஞ்சள், சந்தனம், குங்குமத்தால் திலகமிட்டு, பூச்சரத்தால் அலங்கரிக்கலாம்

## தீபத்திற்குரிய திரிகளும் பயன்களும்

| | |
|---|---|
| பஞ்சு | - சுகவிருத்தி (இலவம் பஞ்சைத் திரித்துப் போடலாம்) |

| | |
|---|---|
| தாமரைத் தண்டில் திரி | - முற்பிறவிப் பாவங்களைக் களைதல், ஐஸ்வரியம் நிலையத்தல் |
| வாழைத்தண்டில் திரி | - சந்தான பாக்கியம், செய்வினைக் கோளாறு நிவர்த்தி |
| வெள்ளைத்துணியில் திரி | - உத்தம பலன், செல்வங்கள் பெருகும். |
| மஞ்சள் நிறத்துணியில் திரி | - அம்பாள் அருளும்,செல்வங்களும் பெருகும். |
| சிவப்பு நிறத்துணியில் திரி | - திருமணத்தடை நீங்கும், மகப்பேறு உண்டாகும். |

நூலிழைகளைத் திரிகளாகப் போடும்போது அவை முறையே 21, 16, 14 அல்லது 7 இழைகளைக் கொண்டிருப்பது உத்தமம்.

## விளக்குகள்

மண்ணால் அல்லது வெங்கலம், பித்தளை. வெள்ளி உலோகங்களால் செய்த விளக்குகளைப் பயன்படுத்தலாம். எவர்சில்வர் விளக்குகளைப் பயன்படுத்துவது உசிதமல்ல. விளக்குகளைத் தரையில் வைக்கக்கூடாது. தட்டிலோ வாழை இலையின் மேலோ வைக்கவேண்டும். வீட்டில் விளக்கேற்றி, வழிபடும்போது பஞ்சால் திரியிடுவது மிகவும் சிறப்பானது.

## தீபங்களை ஏன் மூன்று முறை சுற்றுகின்றோம்?

தீபங்களை 3 முறை சுற்றிக் காட்டவேண்டும். முதலில் சுற்றுவது உலக நன்மைக்காகவும், 2வது சுற்று கிராமத்தின் நன்மைக்காகவும் 3வது சுற்று உயிர்களின் நன்மைக்காகவும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

## தர்ப்பைப் புல்

இந்துமதத்தின் அனைத்து வைதீகச் சடங்குகளுக்கும் தர்ப்பைப் புல்லைப் பயன்படுத்தி வருகிறோம். அதற்குக் காரணம் 'மனிதனின் ஆத்மா' என்பது வித்து இல்லாமல் ஏற்பட்டது என்பது இந்து மதத்தின் கருத்து. விதை போடாமல் வளர்ப்பது தரப்பைப்புல். ஆகவே, இதைப் பயன்படுத்துகின்றோம். இதை கூர்ச்சம் போல் செய்து கும்பத்தின் மேல் வைப்பார்கள். சடங்குகளின் போது தர்ப்பையை மோதிரவிரலில் மோதிரம் போல் அணிவார்கள். அந்த இடத்தில் சுபநாடி ஓடுவதால் அங்கு சுபசுத்தி ஏற்படுகிறது. இப்புல் தண்ணீர் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வாடாது.

## கூர்ச்சம்


தர்ப்பைகளை நுனிப்புறம் ஒழுங்குபெற அடுக்கி வலப்புறமாக முறுக்கி, முடிச்சிட்டு அடிப்பாகத்தை மட்டமாக வெட்டி அமைக்கப்படும். தர்ப்பையின் எண்ணிக்கையும் நீளமும், தேவையை நோக்கி மாறுபடும். கூர்ச்சம் கும்பங்களின் தேங்காயின் மேல் முடியாகவும் கும்பத்திற்குப் பிரதிநிதியாகவும் உபயோகிக்கப்படும்.

## மாங்கல்யம்

மாங்கல்யம் 9 இழைகளைக் கொண்டதன் தத்தவம்.

வாழ்க்கையை உள்ளது உள்ளவாறு புரிந்து கொள்ள

1. மேன்மை
2. ஆற்றல்
3. தூய்மை
4. தெய்வீக நோக்கம்
5. உத்தமகுணங்கள்
6. விவேகம்
7. தன்னடக்கம்
8. தொண்டு



இவற்றை ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் தான் மாங்கல்யம் அமைக்கப்பட்டது.

## பிரகாரத் தத்துவம் - கோயிலை வலம் வருதல்


வழிபடுபவர் வெளிப்பிரகாரம், பின் உள்பிரகாரம்

அதன் பின் அதனுள் உள்ள பிரகாரம் என இம்மாதிரி வலம் வருவது உலக பந்தத்தைச் சிறுக சிறுக விட்டொழிந்து ஆண்டவனை அணுகுவதையே குறிக்கும். கற்பக்கிரகத்தின் முன் நிற்கும்போது நிச்சமற்ற உலகபந்தம் எல்லாவற்றையும் விட்டுவிட்டதாகக் கூறலாம்.

## விமானங்களின் தத்துவம்

புனிதமான இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகம் நீடித்து நிலைத்து நிற்க வேண்டுமானால் காற்று, மழை, வெயில் இவைகளிலிருந்து பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டும். இதற்காகவே கர்ப்பக்கிரகத்தின் மேலே (சிறுகோபுரங்கள்) விமானங்கள் கட்டப்பட்டன.

## திருமண்



“பரந்தாமனின் பாதார விந்தமே உயிர்க்குக் கதி” என்பதை உணர்த்தும் பொருட்டுத் திருவடி போன்று நெற்றியில் திருமண் இடப்படுகிறது. மத்தியில் இடப்படும் செந்தூரம் (சிவப்பு பொடி) இலக்குமியின் அம்சம்.

## துளசி

துளசி என்ற சொல்லு க்குத் “தன்னிகரில்லாதவள்” என்று பொருள். மகாலட்சுமியின் சொரூபமான துளசி இருக்கும் இடத்தில் மகாவிஷ்ணு எப்பொழுதும் வாசம் செய்கிறார் என்று ஒரு நம்பிக்கை. துளசி உஷ்ணத் தன்மை கொண்டது. இது பல நோய்களையும் பாவங்களையும் நீக்கவல்லது.



துளசி தீர்த்தம் பிரசாதமாக பெருமாள் கோயில்களில் தரப்படுகிறது. இது கங்கைக்கு நிகரானது என்பார்கள்.

## வில்வமிலை

சிவனுக்குப் பிரியமானது வில்வமிலை. வில்வத்தின் மூன்று இலைகள் சிவபெருமான் ஏந்தியுள்ள திரிசூலத்தின் வடிவத்தையும் இறைவனின் முக்கண்களையும் காட்டுகிற வடிவில் அமைந்துள்ளது. பூசையின் போது 3 இலைகள் உள்ள வில்வத்தையே பாவிக்க வேண்டும்.



வில்வமிலையால் சிவனுக்குப் பூசை செய்வதால் சகல பாவங்களும் நீங்கி நன்மைகள் உண்டாகும். வில்வமிலை உலர்ந்தாலும் ஏற்கனவே பூசை செய்யப்பட்டு நிர்மால்யமாக இருந்தாலும் திரும்பவும் அவற்றைக் கொண்டு பூசை செய்யலாம்.

## அறுகம்புல்



அறுகம்புல் கணபதிக்கு மிகவும் விருப்பமானது. அறுகம்புல் நடுவில் வெட்டினாலும் மீண்டும் முளைக்கும் தன்மையுடையது. விதையில்லாமல் எங்கும் வளரக்கூடியது. அதைப்போல் ஆத்மாவும் விதையில்லாமல் உருவானது. அறுகம்புல் மூலம் வணங்குவது எமது ஆத்மாவினால் பணிகிறோம் என்பதாகும். அறுகம்புல் அழிவதே இல்லை எனவே தான் ‘அறுகுபோல் வாழ்க’ என வாழ்த்துவர். இது பல நோய்களையும் குணமாக்கக் கூடியது.

## திருநீற்றுப்பச்சை



இதுவும் துளசியைப் போல பாவிக்கலாம். இதை சிவனுக்கும் வைககலாம்.

## வேப்பிலை




மாரியம்மனுக்கு வேப்பிலை மிகவும் பிடித்த பொருளாகும். வேப்பிலை குளிர்ச்சியை அளிக்கும். நோய்க்கிருமிகளை எதிர்க்கும் 'சர்வரோக நிவாரணி' என்று பண்டைக்கால இலக்கியங்களில் வேப்பிலை வர்ணிக்கப்படுகிறது. சில அம்மன் கோயில்களில் வேப்பிலை ஆடை உடுத்தி தங்கள் வேண்டுதலை பக்தர்கள் நிறைவேற்றுவார்கள்.

யாருக்கும் அம்மை நோய் இருந்தால் அவரின் வீட்டு வாசலை வேப்பிலைக் கொத்தைக் கட்டுவார்கள். இது வெளியிலிருப்போருக்கு இவ்வீட்டில் அம்மை நோய் வந்துள்ளது என்பதை அறிவதற்கே. வேப்பிலைகளுக்கு கிருமிகளை அழிக்கும் சக்தியுள்ளதால் அம்மை நோய் கண்டவர்களிடம் உடலில் வேப்பிலையை அரைத்துப் பூசுவார்கள். பூப்படைந்த பெண்களுக்கும் வேப்பிலை அரைத்து உண்ணக் கொடுப்பார்கள். இப்படிப் பல உபயோகங்கள் வேப்பிலைக்கு உண்டு.

## தலவிருட்சம்

ஒவ்வொரு ஆலயங்களுக்கும் தலவிருட்சம் என்ற ஒன்றுண்டு. பண்டைய காலத்தில் அற்புதம் நிகழ்ந்த இடம், இறைவன் காட்சி தந்த இடம், தீர்த்த விசேஷம், முனிவர், ரிஷிகள் தவம் செய்த இடம்போல் சிறப்பு வாய்ந்த இடங்களிலே தான் கோயில்கள் கட்டப்பட்டன. மகாரிஷிகள் மரங்களின் அடியிலேதான் தியானம் தவம் செய்தனர். எந்தெந்த மரங்களுக்குக் கீழ் ரிஷிகள் சித்தி பெற்றார்களோ அந்த மரங்கள் அவ்விடங்களுக்கு தலவிருட்சமாக அமையப் பெற்று வழிபடப்பட்டு வருகின்றன.

## தாமரை



தாமரை மலர் தெய்வீக மலர் எனக் கருதப்படுகிறது. திருமாலின் தேவி திருமகள் பத்ம (தாமரை) மலரில் தோன்றியதால் பத்மாவதி எனப்படுகிறாள். சிவபெருமானின் அக்னி ரூபமான வித்தினை ஆறு தாமரை மலர்கள் தாங்கி அவற்றிலிருந்து ஆறுமுகப் பெருமான் தோன்றினான். இறைவனின் திருவடியை தாமரை மலருக்கு ஒப்பிடுவர்.

சிவப்பு, வெள்ளை, நீலம் ஆகிய 3 வண்ணங்களில் விளங்கும் 3 தாமரை மலர்களை உடையதாக உள்ளது. அதுபோல் தெய்வம் ஒன்றாக இருந்தாலும் அது முத்தொழிலைச் செய்யும்போது 3 விதமான பெயர்களையும் 3 விதமான இருப்பிடங்களையும் உடையதாகக் கருதப்படுகிறது.

**வெண்தாமரை– பிரம்மா சரஸ்வதி– சிருஷ்டித்தல்**
**சிவப்புத்தாமரை – மகாவிஷ்ணு லஷ்மி– காத்தல்**
**நீலத்தாமரை – சிவன் பார்வதி – சம்ஹாரத் தொழில்**

இதயத் தாமரையில் தான் இறைவன் வாழ்கிறார்.

யோகத்தாலும் ஞானத்தாலும் மனம் தாமரை மலர்போல் விரிய வேண்டும் எனச் சொல்வர்.

## திருநீறு, சந்தனம், குங்குமப் பிரசாதங்கள்

ஆலயங்களில் இவற்றை நாம் பிரசாதமாகப் பெற்றதும் முதலில் திருநீற்றை நெற்றியில் சிவசிவசிவ என ஜெபித்தபடி பூசுதல் வேண்டும். பின்னர் புருவமத்தியில் சந்தனப் பொட்டை இட்டு அதன்மேல் குங்குமப் பொட்டு வைக்கவேண்டும். இவற்றை நிலத்தில் சிந்துவது பெரும்பாவமான செய்கையாகும். பொட்டு வைக்கும்போது வலது மோதிர விரலால் வைக்க வேண்டும்.

## உத்தரியம் அணிவது எப்படி?

ஆண்கள் உத்தரியம் அணியும்போது அதனை இடத்தோளின் மேலிருந்து அணியவேண்டும். ஆண்கள் சால்வை அணியும்போது இடப்பக்கத் தோளில் இடவேண்டும். ஏனெனில் சிவனுக்கு இடப்பக்கத்தில் உமையவள் இருக்கிறாள். அவளைப் பாதுகாக்கவே இடப்பக்கம் மறைக்கப்படுகின்றது. அதனால் தான் உத்தரியமோ சால்வையோ இடப்பக்கத் தோளில் அணியவேண்டும்.

சங்கல்பத்தின்போது பெண்கள் பவித்திரம் (தர்ப்பை) எக்கையில் அணிதல் வேண்டும். சங்கல்பத்தின் போது பவித்திரம் ஆண்கள் வலக்கரத்தின் மோதிர விரலிலும் பெண்கள் இடதுகரத்தின் மோதிர விரலிலும் அணிய வேண்டும். அர்த்தநாரீஸ்வர தத்துவத்தின்படி பெண்ணுக்கு இடப்பக்கமாதலால் மூக்குத்தி, பவித்திரம். சேலை, தலைப்பு என்பன பெண்கள் இடப்பக்கமே அணியவேண்டும். காப்புக் கட்டுவதும், நூல் கட்டுவதும் பெண்களுக்கு எல்லாம் இடப்பக்கமே.

சுவாமிக்கு அலங்காரம் செய்யும்போது நைவேத்யம் நடக்கும் போதும் திரைவழியாகப் பார்க்கக் கூடாது. அபிஷேகம் நடக்கும்போது கர்ப்பக் கிரகத்தைச் சுற்றக் கூடாது. கற்பூர தீபம் காட்டும் போது கண்களை மூடக்கூடாது.

வெறுங்கையுடன் ஆலயம் செல்லலாகாது என்பதன் கருத்து கூப்பிய கரங்களுடன் செல்லவேண்டும் என்பதே இறைநாமத்தை உச்சரித்துச் செல்லவேண்டும். தானாக மனமுவந்து கொடுப்பது தானம் இதற்குப் பலன் அதிகம் ஒருவர் கேட்டுத் தருவது தர்மம் - பலன் குறைவு. ஒவ்வொரு வினாடியும் மங்களகரமானது. எங்கள் தூய்மையால் மனத்தையும் செயல்களையும் கடவுளுக்கே அர்ப்பணித்து விட்டால் மற்றவை முக்கியமில்லை.

கடவுளிடம் அன்பைக் கேட்டு அவ்வன்பு கடவுளிடம் இட்டுச் செல்லும். 3 நீதிவழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். கடவுளிடம் அன்பைச் செலுத்தல், பாவங்களைக் கண்டு பயப்படுதல் (Fear of sin) (Love os God) Morality in society நன்நடத்தை ஒழுக்க சீராகவும் இருக்கவேண்டும். அப்போ கடவுள் எப்பவும் உன்னோடு இருப்பார்.

நன்றி: இந்து பாரம்பரியம்

## சிரிப்பின் அர்த்தங்கள்

| | | |
|---|---|---|
| கற்பனையில் சிரிப்பவன் | : | கவிஞன் |
| கண்பார்த்துச் சிரிப்பவன் | : | காரியவாதி |
| காணாமற் சிரிப்பவன் | : | கஞ்சன் |
| கோபத்திற் சிரிப்பவன் | : | வெறியன் |
| தெரியும் என்று சிரிப்பவன் | : | பசப்பாளன் |
| தெரியாது என்று சிரிப்பவன் | : | நடிகன் |
| இடம்பார்த்துச் சிரிப்பவன் | : | எத்தன் |
| எப்போதும் சிரிப்பவன் | : | கோமாளி |
| தெரியாமற் சிரிப்பவன் | : | பைத்தியக்காரன் |
| ஓடவிட்டுச் சிரிப்பவன் | : | வஞ்சகன் |
| நீதியோடு சிரிப்பவன் | : | அறிஞன் |
| நிலைமறந்து சிரிப்பவன் | : | காதலன் |
| செயல்கேட்டுச் சிரிப்பவன் | : | பச்சோந்தி |
| செருக்குடன் சிரிப்பவன் | : | ஆண்டி |
| துன்பத்திலும் சிரிப்பவன் | : | மனிதன் |



# தியானம்



மனிதர்கள் எல்லோருக்கும் ஏதோ ஒரு உருவத்தில் ஆற்றல் இருக்கின்றது. இவர்களுள் சிலர் அந்த ஆற்றலை சரிவர பயன்படுத்தாது இருப்பதால் அவர்கள் பலவீனம் அடைந்தவர்களாக மாறுகிறார்கள். இந்த ஆற்றலை தியானம் பலப்படுத்தி உயர்ந்த உன்னதமான முன்னேற்றத்தைத் தரும். ஒரு மாணவனால், உயர்ந்த தொழிலாளியாகி உயர்ந்த் உத்தியோகத்தவனாக வரும் பலன் உண்டு.





ஒரு மனிதன் பலவீனம் அடைவதற்கு சோம்பேறித்தனமும் காரணமாகின்றது. மனிதர்கள் தனது செயலாற்றல் திறனை நன்கு பயன்படுத்தாமல் போவதும் இரண்டாவது பலவீனமாக அமைகின்றது. இவைகளை போக்கி தியான நிலையில் இருந்தால் அனைத்தும் நன்கு அமையும். எனவே தியானமானது இவ்விதமான பலவீனங்களை கண்டிப்பாக மாற்றும் என்பதற்கு அருணகிரிநாதரை எடுத்துக்காட்டாக கூறலாம். மலையருவி நீரின் சக்தியானது மின்சாரத்தில் காணக்கூடியதாய் உள்ளது. அதுபோல் காற்றின் சக்தியும் அவ்வாறு செய்கின்றது.

"மனம் கெட்டால் குணம் கெடும் குணம் கெட்டால் எல்லாம் கெட்டு வாழ்வே அழிந்து விடும்" இதுவே மனதின் தோஷமாகும். எனவே நல்லொழுக்க வாழ்வோடு வாழவேண்டும். தோஷமுள்ள மனதுடன் தியானத்தில் யாரும் வெற்றி பெறமுடியாது. நம் மனதை 13 வகையான தோஷங்கள் பற்றிக் கொண்டுள்ளன அவையாவன.

| | | |
|---|---|---|
| 1. ராகம் | : | பிறர் பொருளில் ஆசைப்பட்டு அதை அடைய எண்ணுதல் |
| 2. துவேஷம் | : | ஒருவர் மீது எப்பொழுதும் வெறுப்புடன் விரோதத்தை வளர்த்தல் |
| 3. காமம் | : | பேராசை என்னும் அதிகளவு ஆசையை தூண்டுதல், தீய வழியில் செல்லும் ஆசையாகும். |
| 4. குரோதம் | : | நாம் பிறர் மீது காட்டும் பசையான எண்ணங்கள் ஆகும். |
| 5. உலோபம் | : | தன்னிடமுள்ள எந்த பொருளையும் யாருக்கும் கொடுக்காமல் இருத்தல். |
| 6. மோகம் | : | பொருட்கள் மீதும், பூமி, வாகனங்கள் மீதும் அளவற்ற ஆசையை குறிக்கும். |
| 7. மதம் | : | செருக்கு, கர்வம், என்றும் கூறப்படும் சிறிய பிழைகளையும் பெரிதுபடுத்தல், குறை சொல்லுதல். |
| 8. மாற்சரியம் | : | அடுத்தவரின் வாழ்க்கையை பார்த்து பொறாமை கொள்ளுதல் |
| 9. இரட்சியம் | : | தன் கஷ்டங்களைப் போல் மற்றவருக்கும் ஏற்படவேண்டும் என்ற எண்ணம். |
| 10. ஆசூயை | : | பிறரைப் பார்த்து முகம் சுளித்து அருவருத்து பிறரையும் மதியாது அவரையும் அனுபவிக்க விடாது தடுத்தல் |
| 11. இடம்பம் | : | பகட்டாக வாழும் குணமாகும். தன்னிடம் உள்ளதை பெருமித்துப் பேசுதல் |
| 12. தர்ப்பம் | : | நானே பெரிய வீரன், எனக்கு தான் எல்லாம் தெரியும் என்ற குணமாகும். |
| 13. ஆங்காரம் | : | நானே பெரியவன் மற்றவர்கள் சிறியவர்கள் என்ற அகங்கார குணமாகும். இது அமைதியை அழிந்து பகைமையையும் எதிர்ப்பையும் அதிகப்படுத்தும். |

எனவே தியாயம் பழகுபவர்கள் மேற்குறிக்கப்பட்டவைகளை மனதில் இல்லாமல் அகற்றி விடவேண்டும்.

முன்னேஸ்வரம் ஆலயத்தின் தொன்மைமிகு விக்கிரகங்கள்

**சேரல்**

பெயர் :...........................................................................

முகவரி :...........................................................................

...........................................................................

யுனைட்டெட் மேர்ச்சன்ஸ் பிரிண்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட். தொ.பே : 2449683